# நாங்கள் மனிதர்

முருகையன்



# நாங்கள் மனிதர்

முருகையன்

VASANTHAM (PVT) LTD.
SOUTH ASIAN BOOKS
S, 44, 3rd FLOOR,
CENTRAL SUPPER MARKET COMPLEX
COLOMBO - 11.

தேசிய கலை இலக்கியப் பேரவையுடன்
இணைந்து

SAB

சவுத் ஏசியன் புக்ஸ்

NAANGAL MANITHAR

Collected Poems by R. Murugaiyan
First Edition : Feb 1992
Printed at Suriya Achagam, Madras.
Published in association with
'National Art & Literary Association
by
South Asian Books
6/1, Thayar Sahib II Lane,
Madras-600 002.

Rs. 20-00

---

அட்டைப் படம் :

ஈஸ்டர் தீவின், மோயிஸ் விரிகுடாவில்
வரிசையாக அமைக்கப்பட்டுள்ள கற் தலைகள்.

---

நாங்கள் மனிதர்

முருகையன்
உரிமை : ஆசிரியர்.
முதற் பதிப்பு : பிப்ரவரி 1992
அச்சு . சூர்யா அச்சகம், சென்னை.
வெளியீடு : தேசிய கலை இலக்கியப் பேரவையுடன்
இணைந்து
சவுத் ஏசியன் புக்ஸ்
6/1 தாயார் சாகிப் 2வது சந்து
சென்னை-600002

ரூ. 20-00

# பதிப்புரை

தமிழ் இலக்கிய உலகிலே கவிதையின் வளர்ச்சிப் பரப்பானது சற்று விசாலமானதாகவே காணப்படுகின்றது. ஆயினும் ஒட்டு மொத்தமாக நோக்குமிடத்து அவற்றின் பெறுமானத்தில் தரவேறுபாடு நிறைந்து இருப்பதைக் காணலாம். சமூக நோக்கு, மக்கள் சார்பு, சமூக மாற்றத்தைக் கோரி நிற்கும் போக்கு என்பன தமிழ்க் கவிதைப் பரப்பிலே எவ்வளவிற்கு செறிந்தும் விரிந்தும் இருக்கின்றன என்பது ஆழமான ஆய்வுக்குரியதொன்றாகவே உள்ளது. இளம் தலைமுறை எழுத்தாளர்களில் கவிதை முறையிலே நிற்பவர்கள் பலர். ஆயினும் அவர்களில் குறிப்பிடத்தக்கவர்கள் மட்டுமே கவிஞர்கள் என்ற நிலைக்குள்ளாகி கவித்துவத்தை சமூகப் பயன்பாட்டிற்குரியதாக்கி வருகின்றனர். இத்தகைய சூழலிலே தான் மூத்த முற்போக்கு கவிஞரான முருகையன் முக்கியத்துவம் பெறுகின்றார். அவரது கவிதைகளில் ஆழ்ந்த கவித்துவம் பலமுனைகளில் இருந்தும் ஊற்றெடுத்துப் பாய்கின்றன. அதேவேளை சமூக விஞ்ஞான நோக்கும், மக்கள் சார்பும், சமூக மாற்றத்தை வேண்டி நிற்கும் போக்கும் நிறைந்து காணப்படுவது நோக்குதற்குரியதாகும். தமிழ் இலக்கிய உலகில் ஓர் அறிஞராகவும் கவிஞராகவும் விளங்கும் முருகையனின் கவிதைகளில் இருந்து இளம் தலைமுறையினர் கற்றுக் கொள்வதற்கு ஏராளம் உண்டு. அந்த வகையில் அவர் ஒரு வழிகாட்டும் கவிஞராகவும் திகழ்கின்றார்.

அண்மையில் வெளிவந்த 'மாடும் கயிறுகள் அறுக்கும்' கவிதைத் தொகுதியைத் தொடர்ந்து ''நாங்கள் மனிதர்'' என்னும் இக் கவிதைத் தொகுதியினைத் தேசிய கலை இலக்கியப் பேரவை, சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனத்துடன் இணைந்து வெளியிடுவதில் மனமகிழ்ச்சியடைகின்றது. தன்து கவிதைகளை தொகுதியாக நாம் வெளியிடுவதற்கு தொகுத்தளித்த திரு. இ. முருகையன் அவர்களுக்கு எமது வணக்கங்கள். அதனை அழகுடன் அச்சிட்டு வெளியிட்டுத் தந்த சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனத்திற்கு எமது நன்றிகள்.

**தேசிய கலை இலக்கியப் பேரவை**

18/1, மின்சார நிலைய வீதி,
யாழ்ப்பாணம்,
இலங்கை.

# முன்னுரை

நான் இயற்றியுள்ள நெடுங்கவிதைகளும் பாநாடகங்களும் தனித்தனி நூல்களாக அவ்வப்போது வெளியாகியுள்ளன. சிறுகவிதைகள் கொண்ட தொகுதிகள் இரண்டும் வெளியாகியுள்ளன. அவை 'நெடும்பகல்' எனவும் 'மாடும் கயிறுகள் அறுக்கும்' எனவும் பெயர் பெற்றன.

இப்பொழுது வெளியாகும் 'நாங்கள் மனிதர்' என்னும் இத்தொகுதியில், ஏறத்தாழ முப்பதாண்டு காலத்துக்கு மேலாக நான் இயற்றிய தனிப்பாட்டுகள் உள்ளன. இவை தனிப்பாட்டுகளேயாயினும் ஒரே படைப்பாளியின் ஆக்கங்கள் என்ற முறையில் உள்ளார்ந்த தொடர்புகளை உடையன. ஆனால் பல்வகைப் பண்பு படைத்தனவாயும் உள்ளன.

கலையாக்கம் என்பது மனித அநுபவங்களை மூலப் பொருளாக்கி வாழ்கைக் களத்தில் நடத்தப்படும் ஒரு தேடற் பயணமே. அந்தப் பயணத்தின் வெவ்வேறு கட்டங்களுக்கு உரியனவாக வெவ்வேறு தனித்தனிப் படைப்புகள் இருத்தல் கூடும். இத்தொகுதியில் வரும் நிலைபேறு, தோதுப்பாடு, சுவைகள், வெளிச்சம், மாற்றங்கள், கதி, நாட்டம் ஆகிய உட்பிரிவுகள் மேற்கூறிய பயணக் கட்டங்களைச் சுட்டுவன எனலாம். அவ்வாறுள்ளமையால், இந்த உட்பிரிவுகளின் தன்மையும் தரமும் பல்விதப்பட்டு அமைகின்றன. அந்தப் பன்மைப்பாட்டில் ஒரு தொடர்ச்சி

யும் ஒழுங்கும் பொருந்தும் வண்ணம் மேற்படி உட்பிரிவு களை நிரைப்படுத்த முயன்றுள்ளேன். இந்த ஒழுங்கினூடே ஒரு வகை வளர்ச்சியையும் முதிர்ச்சியையும் குறிப்பாக உணர்த்தியுள்ளேன் என நினைக்கிறேன். அந்த அகத் தொடர்ச்சிச் சரட்டை இனங்கண்டு நயப்பது தரமான சுவைஞர்களின் பொறுப்பாகும்.

இக்கவிதைகள் எல்லாம் மனிதகுல மேம்பாட்டை நோக்கிய உள்ளுந்தல்களாகவும், தேடுதலாகவும், விசாரணையாகவும், அங்கலாய்ப்புகளாகவும், தேற்றமாகவும், தெளிகையாகவும், உறுதியாகவும் உள்ளன. இடையறாத பரிசீலனைகளின் ஆவணங்களாகவும் அமைகின்றன. மனிதனைப் பிணித்துள்ள தளைகள் நீங்க வேண்டும்; தடங்கல்கள் அகல வேண்டும்; அதன் பேறாக முழுமையான விடுதலை கிட்ட வேண்டும் என்னும் வேட்கையின் மூச்சொலிகளை வாசகர்கள் உணர்ந்து கொள்வார்கள் என்று நம்புகிறேன்.

வழக்கம் போலவே, இந்த நூலை வெளியிடுவதிலும் நிறைந்த அக்கறை காட்டிச் செயல் புரிந்த இலங்கை, தேசிய கலை இலக்கியப் பேரவையினருக்கும், இப்புத்தக வெளியீட்டாளர்களாகிய சவுத் ஏசியன் புக்ஸ் நிறுவனத்தினருக்கும் என் அன்பும் நன்றியும் உரியன.

நீர்வேலி தெற்கு, இ. முருகையன்
நீர்வேலி, இலங்கை.

# உள்ளுறை


| | | |
|---|---|---|
| 1. | நிலைபேறு | 9 |
| 2. | தோதுப்பாடு | 19 |
| 3. | சுவைகள் | 33 |
| 4. | வெளிச்சம் | 55 |
| 5. | மாற்றங்கள் | 75 |
| 6. | கதி | 121 |
| 7. | நாட்டம் | 147 |

ஊடு போய் எதையும் உள்புகுந்தேறி
ஓடி ஓடி அலசும் நுனி கொண்ட
மோடியான வடி வேலது வாங்கி
மூசி வீசுபவர் பாவலர் ஆவார்.

# 1

# நிலைபேறு

# மாநிலம் பயனுற...

மாவலியைத் திருப்புகிறோம்
என்று சிலர் சொல்வார்.
வறட்சிகளை விரட்டுகிறோம்
என்று சிலர் சொல்வார்.
சீவியத்தைத் திருத்துகிறோம்
என்று சிலர் சொல்வார்.
தேவநிலை பொருத்துகிறோம்
என்று சிலர் சொல்வார்.
நாவலர்க்கும் நாவலராய் நாவல் பல பண்ணி
நாட்டினையே நடத்துகிறோம்
என்று சிலர் சொல்வார்
ஏவருக்கும் தெரியாத மூலை ஒன்று தேடி
எழுதுகிறேன்—
என் பாட்டில்.
எனக்கு இதுதான் போகும்.

கருத்தரங்கம் நடத்துகிறோம்
என்று சிலர் சொல்வார்.
கதை உலகைப் புரட்டுகிறோம்
என்று சிலர் சொல்வார்.
உருக்குலைந்த நம்மவரின் கீழ்மை நிலை எல்லாம்
ஒழித்துவிட்டே ஓய்வம் இனி
என்று சிலர் சொல்வார்
விருத்தருக்குத் தங்குமடம் பல நூறு கட்டி
விடுவதொன்றே புண்ணியமாம்
என்று சிலர் சொல்வார்

ஒருத்தருக்கும் தெரியாத மூலை ஒன்று தேடி
உட்கார்ந்தேன்.
எழுதுகிறேன்.
எனக்கு இதுதான் போகும்

தத்துவ ஞானத்தினது சாறு பிழிந்தெடுத்தே
சருக்கரையும் பருப்புகளும் விருப்பமுடன் கலந்து
வைத்த ஒரு கலவையினை
மக்களுக்கு நல்கி
மறுமையிலும் பல நலங்கள் வாய்க்க
உழைப்பவர்கள்
பெத்த நிலை நீங்குவதே பெருமை
என்று சொல்வார்.
பிரமம் ஒன்றே கருமம் என்றும்
பேசி நின்று வெல்வார்.
சத்தியமாய் எனக்கு இதெல்லாம் பறியாது.
என்றாலும் ...
தனித்திருந்தேன்.
எழுதுகிறேன்.
எனக்கு இதுதான் போகும்

அருள் நெறியை உபதேசம் செய்வோரும்
கூர்ந்த அறிவு நெறி செய்வோரும்
இன்னும் —
சருவமத சன்மார்க்க உபதேசம் செய்வோர்,
சமதரும சாத்துவிகம் வேண்டும்
என்று சொல்வோர்,
இரவுலக நடமாட்டம் இனியது
என்று சொல்வோர்,
எல்லாரும் எத்தனையோ குரல் எழுப்புகின்றார்
ஒரு புறத்தில்,
தனியாக உட்கார்ந்து கொண்டே
ஓட்டுகிறேன் பேனாவை.
எனக்கு இதுதான் போகும்.

மண்ணுடனே புழுதியிலே கிடந்து
உழலுகின்ற வாழ்வும் ஒரு வாழ்வாமோ ?
சிந்தை சென்று நோக்கும் நுண்மையினால்
ஆராய்ந்து
கருவி பல செய்வோம்.
நொடிப்பொழுதில்
திங்களிலும் சென்று தங்கி, ஏறி
விண்ணுலகின் கோடியிலே மீன் கிளையை எல்லாம்
வெற்றி கண்டு மீண்டிடுவோம்
என்று சிலர் சொல்வார்.
தண்ணிழல்கள் பரவியுள்ள மூலை ஒன்று தேடி,
தமிழ் பாட முயலுகிறேன்.
எனக்கு இதுதான் போகும்.

வயல் திருத்தி,
பண்படுத்தி,
வரம்பு கட்டி,
பெய்த மழை நீரைத் தேக்கி வைத்துப் பாய்ச்சி
உயிர் நிலைக்கப் பயிர் வளர்க்கும் உழவர் பலர்.
நாட்டில் இருக்கின்ற
பசியினையே விரட்டிவிட முயலுகிறார்
அந்த நயம் மிகுந்த தொழிலவர்கள்
பயன் மிகுந்த பணியை நடத்துகிறார்
நான் என்ன பண்ணிவிட்டேன் ?
ஏதோ
தியறியிலே,
சொல்லளவில்,
சிந்தனையில் அன்றி,
செயலளவிற் பயன் தருவோர்
வெகு சிலரே ஆவார்.

தெருக்கிளறிச் சரிப்படுத்தித் திருத்துபவர்
வேகும் தீயை ஒத்த வெயிலிடையே
காய்கிறதனாலும்

உருக்கினையும் இரும்பினையும் காய்ச்சி
அடித்தெடுத்தே உருப்படுத்தி,
கருவி பல உண்டாக்குகின்ற
திருப்பணியைச் செய்வோரின் செயலாண்மையாலும்
சேர் பயன்கள் மிகப்பலவாம்.
அது அவ்வாறாக,
கருத்து விளங்காத சில வரி எழுதிவிட்டால்,
கற்பவருக்கு என்ன நயம் ?
என்ன பயன் — அதனால் ?

எப்பயனும் இல்லாத எதுவும் இனி வேண்டாம்.
இல்லாமல் அதை ஒழித்தல் நல்லது
என்று சொன்னால் —
அப்புதிய திட்டத்தை
ஆர் மறுத்தல் கூடும் ?
ஆகையினால்,
'மாநிலத்தின் ஒரு பகுதியேனும்
இப்பணியாற் பயனடையும்'
என்று சொல்லத்தக்க
எதையேனும் செய்யாமல் இருப்பவர்கள் செய்கை
தப்பிதமே என நினைந்து
மூலை ஒன்று தேடித்
தங்கியுள்ளேன்.
எழுதுகிறேன்.
எனக்கு இதுதான் போகும்.

*1963*

# உவகை

ஞாயிறு வார வெளியீடுகளில்,
புதினம் குறைவு.
மெய் தான்.
ஆயினும்—
பாட்டும் கதையும் படமும் இருக்கும்.
கட்டுரை சிலவும் காணப்படலாம்.
ஆரும் புதிய அருமைக் கலைஞன்
அற்புதம் ஒன்றையும் ஆக்கி இருக்கலாம்
இந்த நினைப்புடன் பேப்பரைப் புரட்டினால்....
'வீரகேசரியில்' ''மஹாகவி''யின் படம்.
கனகராசனின் கடிதக் கட்டுரை !

'என்கவுன்ற்றர்' தான் இங்கிலிசேடு,
எங்களைப்பற்றி யார் இதிலே எழுதுவான் ?
இந்த நினைப்புடன் ஏட்டைப் புரட்டினால்,
லட்சுமி கண்ணன் எழுதியிருக்கிறாள்.
பாட்டியின் மடியில்,
பழஞ்சோற்றுடனே
நாட்டார் கதை எனும் உப்பினை உண்டதும்
தயிரும் கம்பனும் சரி சரி கலந்தே
ஊட்டப்பட்ட இளஞ்சிறு வேளையும்
நினைவு கூர்கிறாள்—
நேற்றைய நினைவுகள் !
'என்கவுன்ற்றரிலே' கம்பனை கண்டதே
போதும், போதும்.
புளகம் ஊர்ந்தது.

விண்வெளிப் பயண வெற்றியின் பயனாய்
வேறோர் உலகம் காணப்படும் எனின்....
இரேவதி, பூசம்—
இவற்றுள் எங்காயினும்
சூரியன் போன்ற ஓர் உடுவினை வலம் வரும்
பூமி போல் ஒரு கிரகம் இருந்தால்....
அந்தக் கிரக ஆட்கள் வெளியிடும்
இலக்கிய ஏடு நம் கைக்குக் கிட்டினால்...
அந்த ஏட்டில் ஏதுமோர் மூலையில்,
ஷேக்ஸ்பியர்பற்றி ஓர் செய்தி இருந்தால்...

உண்மையில், நான்
மிக உவகை கொள்ளுவேன்.

*1981*

# நிலைபேறு

பத்தாண்டுகளாய்ப் பாடசாலையில்
ஆசிரியர்கள் பலபேர் கூடி
மாணாக்கர்க்குக் கல்வி பயிற்றினர்.
கல்விப் பகுதி காட்டித் தந்த
பாடத் திட்டம் படித்து முடிந்தபின்
பரீட்சைப் பகுதியார் சோதனை வைத்தனர்,
வைத்த சோதனை மறுமொழித் தாள்களுட்
சில நூறு எடுத்துச் சிப்பம் ஆக்கினர்.
'சரி பிழை பார்த்துப்
புள்ளிகள் இட்டுத் தருக'
என வேண்டினரே.

புள்ளிகள் கணித்துப் போடத் தொடங்கினேன்.
பரீட்சகர் கைந்நூல் பகர்ந்தவாறே
சிவப்புப் பென்சிலால் திருத்த எண்ணி,
அடுத்த வீதிக் கடையினை அடைந்து
பென்சில் ஒன்று பெற்றுத் திரும்பினேன்.
நிறக்கூர் வெளிப்படச் சீவிய பின்னர்
பரீட்சைத் தாள்களைப் பார்க்கத் தொடங்கினேன்.
இருபத்தைந்து தாள்கள் பார்த்தபின்
பென்சிலின் கூரோ தேய்ந்து மழுங்கி

மொட்டை ஆகி முடிந்து போனது,
எழுதும் வல்லமை இல்லாதாகி,
சூழ இருந்த மரக்குழல் நுனியும்
கடதாசியிலே உரசிக் கீற,
இனிமேல் இதனால் எழுதுதல்
இயலாதென்னும் நிலைமை பிறந்ததே.

பென்சிலை மீண்டும் சீவிச் சீவி
நிறக்கூர் வெளிப்படுமாறு செய்தேன்
சீவிய பென்சிலின் நீளமோ குறைந்தது.
நூறு தாள் பார்த்து முடித்த பின்னர்,
பாவம், பென்சில் பாதி ஆயிற்று.
சீவிய காலம் சிறுத்துப் போனது.
குறுகிக் குறுகிக் குறுகிச்
சீவுப்பட்டுச் சீவியம் சிறுத்ததே.

மேலும் நூறு தாள் சரி பிழை பார்த்துச்
சிவப்புப் பென்சிலாற் குறிப்புகள் கீறினேன்.
சிவப்புக் கூரோ தேய்ந்து தேய்ந்து
மொட்டை ஆகி முடி முடியப்
பேனாக்கத்தியாற் பென்சிலைச் சீவினேன்
சீவச் சீவச் சீவியம் சிறுத்ததே!
போகப் போக நீளமும் குறைந்ததே !
குறைந்த பென்சில் குறுணி ஆனதும்
கைப்பிடிப்பதற்கும் காணாதாகிப்
பயனில்லாத பக்குவம் அடைந்தது.
'வேண்டாம் இனி' என வீசினேன்
அப்பாற் சென்று குப்பையுள் விழுந்ததே.

குப்பையுள் விழுந்த குறுணிப் பென்சில்
தேடுவார் அற்றுக கிடந்து திகைத்தது.
மழை பட மண்ணால் மூடப்பட்டது.
மறைந்தது.
புதைந்தது.
மறக்கப்பட்டது.
சீவுப்பட்டுச் சிறுத்த பென்சிலின்
மரவுடற் சீவலும் மண்ணுடன் கலந்தன.
மண்ணுடன் மண்ணாய்
மறைந்து போயின.
இப்படி முடிந்த எனது பென்சிலின்
சிவப்பு கூராற் செய்யப்பட்ட
கீறுகள் யாவும் தாள்களில் இருந்தன,

எழுத்தாய், எண்ணாய் மாறிச்
சிவப்புத் துணிக்கைகள் சிரித்தன தாளிலே.

*1968*

# 2

# தோதுப்பாடு

# ஆளும் ஆளினி நீ

ஆறு மாதமாய் எங்கிருந்தாயெடி ?
அகன்று போய் மறைந்தாய்
என எண்ணி, நான்
வேறு காரியம் பார்க்கத் தொடங்கியே
வேலை செய்து
என்
குடிலில் இருக்கையில்
மீறி—என்னையும்—வந்து புகுந்த நீ
விலக இன்று மறுத்து முரண்டினாய்.
ஏறினாய் என்றன் நேரத்தின் மீதிலே.
என்ன கன்னி, சவாரியா செய்கிறாய் ?

சுற்றிச் சுற்றிச் சவாரி செய்தாலும்
என் சொந்தக் காணி விட்டு
அப்புறம் சென்றிலை.
பிற்பகல்கள்
இரவுகள்
காலைகள்
பின்னிரவுகள், முன்னிரா, மாலைகள்
முற்றும் உன் திருக் கூடத்துக்கு வேண்டுமோ ?
முறை கடந்து நீ என்னைக் குழப்பினாய்.
சற்று நில்லெடி.
கீழே இறங்குக.
தயவு செய்க; என் நேரத்தைத் தந்து போ.

என்ன !
போக மறுக்கிறாயா ?
அட !
ஏது !
கொஞ்சம் இரங்கி நடந்ததால்
மன்னன் ஆகிய என்னையும் மீறி
என்
மகத்துவத்தைக் குலைக்கவா எண்ணினாய் ?
சின்னதே இக்குடில்.
அது உண்மை தான்.
சிறியதாயினும் மன்னன் இதற்கு யான்.
சொன்ன சொற்களைக் கேள்.
உடனே அகல்.
தோகையே, அது வாசல்.
சரி, நட.

கழுத்தைப் பற்றி, படலையால், அப்புறம்
காய் சினத்துடன் தள்ளி
மிடுக்குடன்
கொளுக்கி போட்டு நான் மீண்டு
திரும்பவும்
குடிலுள் நிம்மதியாகச் சரிகையில்,
கிளுக்கென்று என்ன ஒலிஅது ?
பெட்டையே ,
கெட்ட கோபம் வரும் இனி.
போய்விடு.
ஒளித்து வந்து நுழைந்தது
எவ்வாறெடி ?
உருவம் மாறியோ ? அட்டமா சித்தியோ ?

தேவை இல்லை இன்று என்று
திரும்பவும் தெருவில் தள்ளிப்
படலையைப் பூட்டவும்

பாவை, நீ ஒரு பூ மணம் ஆகியோ
பறந்து வந்து குடிலுட் புகுந்தனை?
ஆவதென்ன?
உருவத்தை மாற்றுக.
ஆளும் ஆளினி நீ.
அதனால், இதோ—
நீ விரும்பியவாறு எலாம் செய்க.
என் நேரமீதிற் சவாரி செய்—
சுற்றி வா.

*1960*

# இயலாதோ ?

நீ ஒன்று மொழிதற்கு முயலாதே.
நேரங்கள் கெடுதற்கு வழியாகும்.
வாய் மென்று சுவை முற்றும் உணராமல்
வாதங்கள் புரிதற்கு நினையாதே !

யார் எங்கள் வழிகட்டும் எதிர்மாறாய்
ஏதங்கள் பல நட்டு விடல் கூடும்?
கூர் வந்த விழிபட்ட அதனாலே
கூடிந்த உடல்.
உற்ற உயிர் ஏதோ ?

வேல் என்று சில அற்பர் புகல்வார்கள்.
மீன் என்ற உவமைக்கும் அலைவார்கள்.
சேல் என்ற பழமைக்கு வருவார்கள்.
'தீ' ஒன்று பகைமைக்கு மொழி காணார்.

வார் மின்டி எழுதற்கு மசியாத
மார்பென்று
உன் இரு பக்கம் உளவான
போர் கொண்ட படை வைத்து
வெறிதேயே
'போ' என்று தருணத்தை விடலாமோ?

மாசங்கள் பயனற்று மடியாமல்
வாழ்வொன்றை அமைவித்தல் இயலாதோ ?
பேசும் சொல் தமை விட்டு மருவாயோ ?
பேரின்ப நதி கட்டு முறியாதோ?

*1963*

# தோதுப்பாடு

கட்டுவனில் அன்றொருவன்—
காளை,
'கதைக்காதே;
வெட்டுவேன்' என்று
விறுவிறுத்தான்
தட்டுவத்தில்...
சட்டுவத்தை ஓங்கிச்
சடார் என்று சாடினான்.
புட்டுவத்திற் புக்கிருந்தான், போய்.

போய் இருந்தான் அப்பாவி—
புற்றுட் புகுந்து சுருண்டு
ஓய்விற் கிடக்கும் ஒரு பாம்பாய்!
'ஆயிரந்தான்
சொன்னாலும் நீங்கள் துணைவர் அன்றோ?'
என்று வந்தாள்—
முன்னால் அடங்கி — முனைப்பு

'எனக்குப் பசி' என்றான்.
ஏதும் உரையாள்—
மனைக்கு விளக்காக வாய்த்தாள்.
மினைக்கெடவும்
நேரமில்லை ஆகையினால் நின்றபடி கூவினான்
தாரம் திரும்பினாள் — சற்று.

'முதலாம் தரம்' என்றான்.
மூடிய வாயின்
அதரம் திறவாள் அவளோ,

மெதுவாய்
'இரண்டாம் தரம்' என்றும்
ஏலம்போல் ஓலம்.
அருண்டும் உசும்பாள் அவள்

'மூன்றாம் தரம்' என்று மூடினான் தன் வாயை.
'ஏன் தான்?' எனவும் இவள் கேளாள்.
சான்றோன்
எழுந்தான்.
சமையலறை ஏகினான்.
ஈந்தான்—பழஞ்சோ றெடுத்துப் பகிர்ந்து.

ஊறுகாயோடும் உருளைக் கிழங்கோடும்
கூறும் விகடமொழிக் கூட்டோடும்
சோறருந்தி
வேடிக்கை வாழ்வாய்
விளையாடிக் கொண்டிருந்தார்.
சோடிக்கோ தூரம் — துயர்.

'ஏதும் பகிடி இலையானால்
உங்களுக்குத் தோதுப்படாது' என்று
சொல்லினாள்
'நீ மட்டும் என்னவாம்?' என்றான்.

இரு பேரும்
தட்டுவத்தின்
பின்னங்கள் பார்த்தார் — பிறகு.

**1968**

# பிழை

ஆலம் விழி என அறைபவர் உளரே.
ஆணின் பகை அவை என அவர் மொழிவார்.
பாலின் மொழி உனது எனும் அதை உணரின்
பாவம் புரிகிற பழியுரை பகரார்.
சாலம் நெடிதெடி.
அதை விடு, தமிழே!
சாவின் பிடியினை அகல் வழி அருள்வாய்.

சிந்தும் முறுவலும்
அதனையும் அருகச்
செய்யும் குறுகிய தொழில்களும் ஒழிக.
முந்தும் மன வெறி மொழிகளில் அமையின்
முன்பு இங்கு இலை எனும் ஒரு கலை மலரும்.
கந்தம் படு மலர் சொருகுவை எனினும்
கண்டம் பட உயிர் திருகுதல் பிழையே.

இனியும் பொழுதினை அரிவதென்?
இளமை
எரியும்படி செரு புரிவது நினைவோ?
கனியும் பழுதென அமைகிற சுவையே!
கலகம் தனை ஒழி.
'அது' செய இசைவாய்.
மனிதன் படுகிற துயரினை அறியா
மடம் என்பது பிழை.
வருக என் அருகே.

*1962*

# துணிவு

தலைச்சுற்றல் வயிற்றுப் பிரட்டல்
தவித்தல்கள் — சுழற்சிக் குமட்டல்
கரைச்சல்கள், நமட்டுச் சிரித்தல்
முதலான
உலைச்சல்கள் நெருக்கும்படிக்கு
உன்
உடற்கு இன்று வருத்தம் பிடிக்க
ஒருப்பட்டு விருப்பம் தெரித்த
செயல் ஏதோ ?
அலைச்சல்கள் ஒழித்து
உன் மடிக்குள்
அணைத்தல்கள், உதைத்தல். மிதித்தல்,
இனிக்கின்ற சிமிட்டல் பொருத்தி
விளையாடும்
நலக்கொஞ்சல் பயிற்றும் சுறுக்கன்
நமக்கென்று வரட்டும் வரட்டும்
எனக்கொண்ட விருப்பம் கொடுத்த
துணிவேயோ ?

1972

## பதில்

'எப்போதும் இங்கே எனக்குங்கள் ஞாபகம் தான்
அப்படியே உங்களுக்கும் என் நினைவு தோன்றிடுதல்
உண்டா ?' என எழுதி உள்ளாய்.
அதனை இன்று
கண்டேன் — உனது கடிதம் பிரித்தவுடன்.

'ஆமாம்' எனவே பதிலை அனுப்பிவிட்டால்
ஏமாந்து போகாமல்
என்னை
உனது அகத்திற் பூசிப்பாய்.
உண்மை !
புனை இழையே'
அவ்வாறு
கூசாது பொய்யைக் குறித்தனுப்பக் கையெடுத்தால்
ஏதோ ஒன்று என்னை இழுத்து நிறுத்ததெடீ !
ஆதலினால் உண்மையினை அப்படியே தீட்டுகிறேன்.

காலையிலே கந்தோர் — கறான நேரத்திற்
போய்விடுதல் தானே எனக்குப் பிடிக்கும்?
இதை
நீ அறிவாய்.
ஆதலினால்,
நீல்லாமற் பல் தீட்டல்,
தண்ணீர் முகத்தில் தடவல்,
புதினத்தாள்

மேலெழுந்த வாரியாய் மேய்ந்த பிறகு,
நகர்
உண்டிக் கடைக்கும் ஒருவாறு போய் அமர்தல்,
கொண்டு வந்து வைக்கும் இடியப்பம் — கோப்பிகளை
உள்ளே செலுத்தல்,
உடனே வசு ஏறல்,
கந்தோர் அடைதல்,
கடமை நிறைவேற்ற
ஐந்தாறு தாளில் அடையாள மை இடுதல்,
'கன்றீன்' அடைந்து கடித்தல் (எதையேனும்!)
— இந்த விதமாய் எடுக்கப்படும் நேரம்
போக,
மிகுதிப் பொழுதுகளில்
உன் நினைவே
ஏகி எனக்குள் இருப்பது மெய்.
ஒப்புகிறேன்.

உன்னுள் வளரும் ஒருவன் நலம் தானே ?
என்ன புதினம் ?
எழுது.

*1969*

# மெலிவு

முன்பு மெலிந்து வளைந்து திரிந்தாய்.
மூரல் பகிர்ந்து வழங்க முயன்றாய்.
பின்பு வளர்ந்து திரண்டு பொலிந்தாய் —
பேதைமை குன்றி மணந்து விருந்தாய்.
அன்பு பிறந்து முதிர்ந்ததும்,
அந்தோ !
ஆறுதல் இன்றி உழன்று
துரும்பாய்த்
துன்ப சுரம்பட வெந்து நலிந்தாய்.
தோள் துயில் நல்க இசைந்து வசைந்தாய்.

கொண்ட என் இன்கொடை நொந்து சுமந்தாய்.
கோலம் உருண்டு திரண்டு செறிந்தாய்.
அண்டை அயல் பிறர் கண்டுணர்கின்றார்.
ஆயினும் நீ ஒரு தாய் என நின்றாய்.
விண்டு பிறந்த இரண்டுயிர் தந்தாய்.
மீள மெலிந்து மெலிந்து கரைந்தாய்.
உண்டு சிறந்து திரும்ப உருண்டாய்.

ஓ, நம் மரு
வெருண்டாய்!

*1971*

## குழந்தை உளவியல்

காலை எழுந்த கண்ணன்
தனது
பாலை எடுத்தான்—
பருகும்பொருட்டு.

வெங்காயத்தாள் அங்கு கிடந்தது.
பச்சைத் தண்டுக் குழலாய் மலர்ந்து,
வெள்ளைப் பூவைத் தலையிலே சூடி,
கட்டுடன் கட்டுப்பட்டு,
கறியாய்—வறையாய்—மாறக்
காத்துக் கிடந்தது.
யசோதா வீட்டுச் சமையல் மேசையில்
வெங்காயத்தாள் அங்கு கிடந்தது.

காலையில் எழுந்த கண்ணன்
தான்
ஒரு வெங்காயத்தாள்
மெல்ல எடுத்தான்.
மெல்ல எடுத்து,
மேல் நுனி, கீழ் நுனி செவ்வையாய் நறுக்கினான்.
குழல் ஒன்று செய்தான்.
குவளைப் பாலிலே குழலை வைத்துச்
சாவதானமாய் உறிஞ்சிக் குடித்தான்.
குழலின்வழியே பானம் எழுந்தது.

நறும்புக் கண்ணனின் வாயுள் நுழைந்தது.
குவளையில் மட்டம் குறைந்தது.
இறுதியில்—
பானம் எல்லாம் முடிந்தது.

குழலிலே கானம் ஊதிடாக்
குழந்தை
குழலினாற் பானம் குடித்துப் பார்த்தது.
குழலையும்
அந்தக் குழந்தை
கடித்தது.

ஐந்தோ ஆறோ வெங்காயத்தாள்
கண்ணன் பல்லாற் கடிக்கப்பட்டன.

மூலையில் நின்று முறுவல் புரிந்தாள்—
தாயார் யசோதா—
சத்தம் இடாமல்!

ஓடிப் போனாள்.
உரலிலே கட்டி மிரட்டவில்லை—அவனை.

மெச்சினாள், மிகவும்.
தட்டினாள்—
முதுகிலே.

*1981*

# 3

# சுவைகள்

# தடுமாற்றம்

ஒரு சில ஆண்டின் முன்னால்....

உண்மை, பொய், நன்மை, தீமை,
சரி, பிழை அறிந்திருந்தோம்.

சயிக்கிளும் லயிற்றில்லாமல்,
தெருவிலே இறக்க மாட்டோம்.
'ற்றிக்கெற்றுக்' கையில் இன்றி
வருவமோ—
கூத்துப் பார்க்க?

வழுக்களை விலக்கி வைத்தோம்.

இப்பொழுதெல்லாம்....
நம்முள்
எதற்குமே தடுமாற்றம் தான்!
அப்பிழை
நீண்ட ஞாய ஆய்வினால்.
சரியாய்ப் போகும்.
இப்பெருஞ் சரியும்
நீதி இழுபறி வாதத்தாலே
முப்பது மடங்கு
தீய முழுப்பிழை
ஆதல் கூடும்.

பாழமன்றுகளில்,
சட்டம் பாசி பண்ணுவதால் மட்டும்
நாளைய ஆள்வார் தம்மை
நாம்
சிறைப்படுத்தல் கூடும்.

ஏழு குன்றுகளில் ஏறிக்
காதுகள் உடைக்கும் சத்தம்
போடுகின்றதனால்,
பச்சைப் பொய்களும்
மெய்யாய்ப் போகும்.

ஒரு சில ஆண்டின் முன்னால்
உண்மை பொய் தெரிந்திருந்தோம்.
இப்பொழுதெல்லாம்
நம்முள்
எதற்குமே தடுமாற்றந்தான்.

1980

## சுவைகள்

சின்ன மாமி சிரிக்கிறாள் கொஞ்சம்.
முன் புறம் பார்த்தால்,
படியச் சீவிய கூந்தல்;
இரண்டு குங்குமப் பொட்டு—
பின் புறம் பின்னலோ கொண்டையோ
இல்லை.
குறுக நறுக்கின கூந்தல்தான் உள்ளது.

'அடுத்த தடவை
அமெரிக்காவிலே
வீடியோ றெக்கோடர் ஒன்று வாங்கி
வீட்டுக்குக் கொண்டுவர வேண்டும்.
வேறு
சாமான்கள் கொண்டுவர மாட்டேன்'
என்றாள்.
தன் கூந்தல் தடவி விட்டாள்.
தலையைச் சாய்த்தாள்.

' அது ஒரு பெரிய திரவியமா ? '
என
மருமகன் கேட்கிறான், மாமியாரிடம்.
' யாரோ சில பேர்—
வேலை இல்லாதவர்—
அடிக்கிற கூத்தையும் இடிக்கிற இடியையும்
படிக்கிற பாட்டையும்

மறுபடி
மறுபடி
போட்டுப் பார்த்துக் கேட்பது தானோ
பெரிய காரியம்?'
—மருமகன் கேட்கிறான்.

தாலியும் சேலையும் தாவணி மடிப்பும்
தமிழ்ப்பட விருப்பமும் இன்னமும் பேணும்
அமெரிக்க மாமியோ அதிசயப்படுகிறாள்.

'நெடுமுடிக் குறுந்தாடிக் கொழும்பு மருமகன்
எவ்வித பொருள்களில் இரசனை உள்ளவன்?
எவ்விதச் சுவைகள் இவனிடம் உள்ளன?
சின்ன மாமி திகைக்கிறாள்—கொஞ்சம்.

*1981*

## சீர்திருத்தம்

இலை தழை குழைகளால் மேனியை மூடிய
அறை குறை உடை உடைப் பழைய காலம்
சென்று மறைந்தது.
சிறிது சிறிதாய்த்
திருந்தித் திருந்தி, வருந்தி, வருந்தி
ஆடைகள் நெய்தே அணியலாயினோம்.

மூடிய உடலே முறை மரபு என்ப.

சட்டைகள் போட்டோம்.
சால்வைகள் திரித்தோம்.
நெட்டைக் கையுடன் செட்டைகள் பொருந்திய
றேந்தைகள் வைத்த சட்டைகள்
அணிந்தோம்.

பின்னர்,
காலம் சுழன்றது.
புரண்டது.
நெட்டைக் கைகள் குட்டை ஆயின.
குட்டைக் கைகள் நெட்டை ஆயின.
நெட்டையே குட்டையாய்க் குட்டையே நெட்டையாய்
மாறி மாறி வந்து போயின.

சென்ற சில நாளாக,
நாங்கள்
தோள்மூட்டடிவரை வந்து முடியும்

மோடியில் அமைந்த ரவிக்கைகள் அணிகிறோம்.
நாளைக்காயினும் வேறொரு 'பற்றேணில்'
சட்டைகள் போடுதல் தக்கதாகும்,
முதுகு தெரிவதே ஆயினும்
முன்புற
வயிறு தெரிவதே ஆயினும்
இனிமேல்,
முழங்கை மூட்டச் சட்டை போடுவோம்.

நாளைய 'ஃபா(ய்)ஷன்' காட்சியின்பொருட்டுப்
புதுமை வேண்டும்.
ஆகையால்
முழங்கை முட்டச் சட்டை போடுவோம்.

*1969*

## தலையீடு

எனக்கென்று புறம்பாகத் தலையொன்றுண்டே.
இதற்குள்ளே மற்றவர்கள் தலை இட்டாரேல்....

கனக்க அங்கே நிறைய இடம் உண்டென்றாலும்
கலங்கலர்கள் என் தனிமை குலைக்கவொட்டேன்.
வினைக்கடமை இல்லாதார்
பொழுதைப் போக்கி விளையாட
அனுமதியேன்.
விரும்பி வந்து
என்
நினைப்பு வளம் தனிற் பங்கு கேட்போர் உண்டேல்,
'நில்லாதீர், இருங்கள்!' என உபசரிப்பேன்.

'மற்றவர்கள் தலைபோன்றது எனது என்றாலும்
மறுதலைகட்கு இல்லாத சிறப்பியல்பும்
சற்றுண்டே.
ஆதலினால்...
தயவு செய்து தள்ளி இரும்; குழப்பாதீர்'
என்று வேண்டி
முற்றுவிப்பேன் என்னுடைய விண்ணப்பத்தை.

முதியவரே, வணக்கம் ஐயா!
உமது சொத்தை விற்பதற்கு முயலாதீர்.
தேவைப்பட்டால்—
வேளை வரும்—
ஆள் அனுப்பிப் பெற்றுக் கொள்வேன்.

*1966*

# நடப்பு

சயிக்கிளில் ஏறிய காரணத்தாலே
தம்பி சரவணைக்குப் பெரு நடப்பு
நிலத்திலே ஊர்கிற மானுடர் யாரும்
நெளியும் புழுக்கள் என்றே
அவன் நினைப்பு

மயிக்கிலே பேசிடும் மாணிக்கர் கூட
மண்புழு என்றுதான் அவன் கணிப்பு
'எதற்கையா நடக்கிறீர்?'
என்கிறான்—சரவணை.
இவர் என்றால் அவனுக்கோ ஒரே பழிப்பு.

மாலையில் மரம் நடும் கொண்டாட்டம்,
மாணிக்கர் போகிறார்—அதற்காக.
மாலைகள் ஐம்பது விழக்கூடும்
மதிப்புள்ள மனிதர்தான்—மாணிக்கரும்.

ஆனால்...
சயிக்கிளில் ஏறிய காரணத்தாலே
தம்பி சரவணைக்குப் பெரு நடப்பு
'அங்கெயும் போறியள்,
இங்கெயும் போறியள்.
அம்பலவாணற்றை காரை அனுப்பவா ?'

தங்கம் அருகிலே சமாந்தரமாய் வர,
தம்பி சரவணைக்குப் பெரு நடப்பு.

***1982***

# உபசாரம்

கிண்ணம் வழியக் கிறுக்கும் மது நிறைத்தீர்.
வண்ண நறுஞ் சர்பத்தும் வைத்துள்ளீர்.
உள் நிறைந்த
காதலினால்
இந்தக் கருமங்கள் நீர் செய்தீர்.
மேதகையீர். வாழி—
மிக.

ஆதரவைப் போற்றுகிறோம்.
அன்பை வணங்குகிறோம்.
போதையினைப் போற்றோம்.
புறம் நீப்போம்.
ஆதலினால்,
வேண்டாம் உம் சாராயம்
மெய்ம்மறவோம்.
தள்ளாடோம்.
தீண்டோம்—இக்கிண்ணம்.
திடம்.

காதில் இனிக்க உதைக்கின்ற சர்பத்தும்
மோதும் விழியில்—
முழுப்பகட்டாய்
ஏது !
கடுஞ்சிவப்பாய் வந்து கனன்று மினுங்கும்.
விடும்.
அதிலும் இல்லை—விருப்பு.

வெயில் உறைக்கும் வேளை—
வியர்வை நனைக்கும்.
துயில் நிறைத்த நம் விழிகள் சுற்றும்.
செயல் மறுக்கும்.
சில்லென்ற தண்ணீர்—
சிறிது வெறுந்தண்ணீர்—
நல்கிடுவீர்.
நன்றி.
நலம்.

அலைந்து களைத்த உடல்
ஆகையினால்... நீவிர்
கலந்து, சருக்கரைப்பால், கையில்
பொலிந்திருக்க
வந்தீர்கள்—எம்முன்.
வணங்குகிறோம்.
சத்தினையும்
தந்தீர்கள்.
மெச்சல் தகும்.

*1974*

# ஞானியார் கேள்விகள்

'பிறரோடு தொடர்பு கொள்வதைத்
தவிர்க்கும் போக்கு—
இதுவேதான் என் வரையறை
உங்கள் நோய்க்கு'—
மூக்குக் கண்ணாடி கழற்றி,
கையினாற் சுழற்றியவாறே
சொல்கிறார்—வயித்தியர்.

ஞானியார் கேட்டு நகைக்கிறார், தமக்குள்.
'அவருக்கென்ன, பெரிய வயித்தியர்!
இதுவும் சொல்லுவார், இன்னமும் சொல்லுவார்.
பிறரோடு தொடர்பு கொண்டால்....
ஏது காணும் நடவாமல் இருத்தல் கூடும்?
'சில வேளை ஒரு யானை மாலை போட்டுச்
சிம்மாசனத்தில் இவர் தம்மை வைக்க,
பலகாரம், அதிகாரம் இவர்க்கு வந்தால்?

'எவனேனும் றொக்கெற்றில் ஏற்றி வைத்தால்?
எல்லை இல்லா விண்வெளிக்குள் இவர் நுழைந்தால்....
எமலோகம், வைகுண்டம் காண நேர்ந்தால்...
'தெருவோரம் போகின்ற எவளோ
செல்லச் சிரிப்புடனே
முடுக்கொன்றுள் இழுத்துச் சென்று
பரிவோடு முத்தங்கள் பகிர்ந்து கொண்டால்....?

'ஏனோ வம்பு?
வேண்டாம் தொடர்பு;
சும்மா இருத்தலே சுகமாம்'—
ஞானியார் தமக்குள் நகைத்துக் கொள்கிறார்.

1980

# சம்பள அதிகரிப்பு

'விலை கூடி விட்டதய்யா'
என்றோம் நாங்கள்.

'மெய்தானே !
உலகமெங்கும் அப்படித்தான் ;
கலகங்கள் செய்யாதே' என்று
மெத்தைக் கதிரையிலே இருந்தபடி
கனவான் சொன்னார்.

'தலைகூட இடிக்குதய்யா—விடாமல்;
எங்கள் சம்பளத்தைக் கூட்டுங்கள்'
என்றோம் நாங்கள்.

'பல பேசித் தர்க்கங்கள் பண்ண வேண்டாம்;
பாவம் என்று பார்க்கிறேன்'
—கனவான் சொன்னார்.

'மாதங்கள் பல போயும்
துளி என்றாலும் வாழ்க்கை நிலை திருந்தவில்லை ?
—துடித்தோம் நாங்கள்.
'தாருங்கள் வேதனத்தை உயர்த்தி'
என்று, தலைகீழாய் நின்று,
இரந்து கேட்டோம் நாங்கள்.
'வேறுங்கள் கொள்கை;
எங்கள் கொள்கை வேறு;
விரோதிகள் நாம்' என
மிண்டிப் பார்த்தோம்—நாங்கள்.

'சீ, உங்கள் முணுமுணுப்பே அறுப்பாய்ப் போச்சு'
—சினந்தபடி புறுபுறுத்துக் கனவான் சொன்னார்.
சரி, இந்தா.
உங்களுக்காய் இரக்கப்பட்டுச்
சம்பளத்தைக் கூட்டுகிறேன்'
—கனவான் சொன்னார்.

'பெரிய உபகாரம், அய்யா'
என்றோம் நாங்கள்.

பெரிய கடை போய் வந்தோம்—
சாமான் வாங்க.
எரிகின்ற நெஞ்சுடனே வீடு மீண்டோம்.
ஏன் என்றால்...

ஆனை விலை, பூனை எல்லாம்.
கரிகின்ற குறங்கொள்ளி எங்கள் வாழ்வு.
கடைகள் எல்லாம்
கனவான்தான் நடத்துகின்றார்.

*1982*

# கடவுளுக்கு விளையாட்டு...

தொடர்ந்து மூசிச் சுழற்றிய காற்றும்
ஓய்ச்சலே இன்றி ஊற்றிய மழையும்
விளைத்த சேதமோ மிகமிகப் பெரிது.

வெள்ள நிவாரண வேலையின் பொருட்டு
ஜீப்பிலும் லொறியிலும் நடந்தும் அலைந்தவர்,
மாட்டு வண்டி, வள்ளம், சயிக்கிள்,
கிடங்கிலும் சேற்றிலும் விழுந்தெழ உலைந்தவர்—
கடமையின் இறுதியில்,
காரால் இறங்கிய
ஆட்சித் தலைவர் அலுத்துக் கொள்கிறார்—
'கடவுளுக்கு விளையாட்டு
கவிண்மென்ற்றுக்குச் சீவன் போகுது!'

அரசின் ஓர் அங்கம் என்ற முறையிலே
உரிமையும் உண்டு போலும்!
அந்த அலுவலர் அலுத்துக் கொள்கிறார்.

*1984*

## எங்கள் தாத்தா

## நித்திரை போகிறார்

'ஐந்து தலை நாகம் ஒரு கட்டுக்கதை' என்றே
அறிவேட்டில் வெளி வந்த ஆட்டிக்கிள் கண்டார்.
நொந்து சற்றே குழப்பமுற்றார்;
மறுபடியும் படித்தார்.
'நோக்கம் என்ன?' என வியந்தார்—
தமக்குள்ளே—தாத்தா.
'இந்த உலகத்தில் அது இல்லையோ?
ஒரு கால்....
இந்திரலோகத்தில் தானோ, பாதலத்தில் தானோ
—அந்த உயிரினம் இருக்கும்?'
என வியப்புக் கொண்டார்.
அமைதி குன்றிக் கலங்குகிறார்,
பாவம், எங்கள் தாத்தா!

'ஐந்து தலை இல்லை என்றால், ஆறுதலை
உண்டோ?
அரு உண்டோ, உரு உண்டோ? அருவுருவம்
உண்டோ?
பஞ்ச முகம், பன்னிரண்டு புயங்கள், எட்டுத்
தோள்கள்
பத்து முடி, மலை சுமக்கும் பலசாலி முதுகு
என்று வரும் எல்லாமே கட்டுக்கதை என்றும்
எழுதிவிடத் தயங்கான்கள்—
இக்காலப் பொடியன்ஸ்.

இங்கிலிசில் ஆதாரம் காணும்வரை ஏற்கேன்.
எதை எனினும்' என்று
மன அமைதி கொண்டார், சற்றே.
ஆங்கிலம் தான் வேதம் என்ற அக்காலப்
படிப்பின்

அடிப்படையில் ஊறியவர்,
பிற்பாடு, பென்சன் வாங்கி வரும் காலத்தில்
வாகடங்கள் கற்றார்.
மகா யோகி குருஸ்வாமி உபதேசம் கேட்டார்.
வேங்கை கலா கேசரியாம் தம்பிரான் கூறும்
விரிவான காலட்சேபங்களையும் கேட்டார்.
நாங்கள் இன்று படிக்கின்ற விஞ்ஞானக் கல்வி
நலம் அறியார்.
ஆனாலும், படிப்பாளி, தாத்தா.

அறிவேட்டில் அவர் பார்த்த பாம்பியல்புச் செய்தி
அவருடைய அமைதி நிலை குலைத்து விட்டது
உண்மை.
'எதை ஏட்டில் எழுதலாம் என்ற பொறுப்பின்றி
எல்லாமே அச்சடித்து விடலாமோ?' என்று
மிக வாட்டம் அடைந்தவராய் முணுமுணுத்துக்
கொண்டார்.
'விண்ணாணம், விண்ணாணம்' என்று தமக்குள்ளே
பிறர் யார்க்கும் கேளாத சிறு குரலிற் பேசி,
பின்னர் ஒன்றும் பேசாமல் மௌன நிலை கண்டார்.

'நாகங்கள் ஐந்து தலை கொண்டனவாய் இல்லை;
நாகலிங்க சாமி சிலை? நமக்கு எதற்கு வம்பு?
தேகங்கள் எங்கள் சிறை—வீடு பரலோகம்;
திக்கெல்லாம் பரப்பிரமம்; சின்மயானந்தம்'
ஊகங்கள் பல கலந்து கலங்கலாய் ஓட
உறக்கத்தில் ஆழுகிறார்—நம்முடைய தாத்தா.
காகங்கள் காலையிலே கரைந்து வர விழிப்பார்.
கண் உறங்கி, ஆறுதலாய் மறுபடியும் எழுவார்.

1977

# பற்று

பீட்டனார் பிரபு—பெருநிலக் கிழவர்;
அந்தி மாலையில் வயல் வெளி சென்று
மூன்றாம் பிறையை முயன்று தேடினார்.
இளம் பிறை கண்டால், எல்லை இல்லா
அதிட்டம் என்பதால் அதனைத் தேடினார்.

தேடிக் கண்டவர்
திரும்பி வந்ததும்
வீட்டறைக் கதவில் ஓர் நீக்கலைக் காண்கிறார்.
பதறித் துடித்து, படார் என அடித்துக்
கதவை இழுத்துக் கவனமாய்ப் பூட்டினார்.

அவர் ஒரு சிறந்த அதிட்டசாலிதான்.
பிறை பல கண்டோ,
பிற பல பெரிய, சிறிய
குறுக்கு வழிகளில் முனைந்தோ
தேடிய செல்வம் சிறியதல்லவே!
வீட்டறைப் பெட்டக மேட்டிமை கொஞ்சமா?
காணி உறுதிகள், காசோலைப் புத்தகம்,
மின்னும் பொன்னகை, வேறு பணங்கள்
பெட்டகத்துள்ளே பேணப்பட்டவை.
பெட்டகம் வீட்டறை மூலையில் இருப்பதால்,
வீட்டறைக் கதவு பூட்டப்பட்டது.

பிறையைக் கண்டவர்
அறையைப் பூட்டினார்.

**2**

—

மெய்கண்ட ஞானியார் விரிவுரை செய்கையில்,
பின்வருமாறு பேசினார்களாம்—
பிறவியின் நோக்கம் இருவினை நுகர்வே.
இருவினை நுகர்வால், இருள் மலம் தேயும்.
இருள் மலக் குணங்களோ அகந்தையும் மமதையும்.
……
எனது எனும் உடைமைப் பற்றே மமதை.
உடைமைப் பற்றை ஒழிக்க முயல்வதே
பிறவிப் பயன் எனப் பேசத் தக்கதாம்.
—மெய்கண்ட ஞானியார் விளக்கம் கூறினார்.

**3**

—

பெருந்தகைப் பிரபுவோ பிறை பல கண்டவர்.
இரு வினை என்ன, பல வினை நுகர்ந்தவர்,
எழுபதாண்டுகளாய் இதை அவர் செய்கிறார்.
ஆயினும், அகந்தை—மமதை குறைந்ததா?
உடைமைப் பற்றில் ஒரு சிறு தளர்வு?
அசையவே இல்லை—அத்தனை இறுக்கம்!

இல்லையேல்....
பீட்டப் பிள்ளைகள் கண்ட பழையவர்
எனினும்,
பிறையைக் கண்டபின், பிரபு
அறையை ஏன் பூட்டினார்—
அத்தனை கவனமாய்?

*1978*

# தன்னிரக்கம்

எத்தனை தரம் தான் நிலைக்கண்ணாடியின்
திருமுன் சென்று 'தெரிசனம்' காண்கிறாய்?
அண்டை வீட்டுப் பெண்டுகள்
ஆடி முன்
சென்று நின்றால் 'சென்ற்று' பூசுவார்.
பூசல் மாவும் போடுவர்—பூவினால்!
சின்ன இதழ்களிற் சிவப்பும் பூசுவார்.
வகிடு பிரித்து, பல்பால் எனப்படும்
கொண்டைகள் அமைத்தும் கொள்ளுவார்.

நீயோ,
நீண்ட மூஞ்சியின் நீட்சியை நீட்டவும்
பூண்ட கந்தலின் நலுங்கலை நலுக்கவும்
குலைந்த தலைமயிர் குழப்பிப் பரப்பவும்
திரைந்த தோல்களின் சுருக்கினைப் பெருக்கவும்
மீண்டும் மீண்டும் நிலைக்கண்ணாடியின்
துணையினை நாடுவாய்.
துயரம் தோய்ந்த
உன்
விம்பம் கண்டு விம்மி நீர் கலுழ்வாய்.
மற்றையோர் உன்னைக் கட்டிப் பிடித்துக்
கூட அழாததைக் குறையாய்ச் சொல்லுவாய்.

வேண்டாம், ஐய, வெளியிலே வந்து பார்—
ஊர்வலம் செல்வதை.
ஓடி, முன்வரிசையிற்
சேர்ந்து பாடி நடந்தால்,
ஆர்ந்து நாம் உன் இசை அநுபவிப்போமே!
*1967*

# நாரோ பூதமோ ?

ஆறுமுகசாமி அவர்கள் மறைந்தார்கள்.
வானொலியின் மூலம் மரண அறிவித்தல்
மூன்று நிமிடம் முழங்கியபின் நின்றது காண்.

அன்னாரவர்கள்—
சீதா, கவிதா, சிவதா, சிவராசா,
பூதா, பொலிதா, புனலீலா, பொன்னீலா,
வேதா, விறூற்றா, விஜித்தா, மிறூதங்கா,
பாடாறவின்ற்றா, பறோதா, பலிடீரா,
தீரா, சிறீக்சா, திராட்சா, திணைநாதா
ஆகியோர் தங்கள் அருமை அப்பா.
அம்மட்டோ ?

அன்னாரவர்கள்—
தமி, ரவி, சலி. லலி,
டுமீல், டமார், டெவீல், ஸ்குவீஸ்,
நரேன், சுரேன், ஒறேஞ்ச், டிறேஞ்ச்,
வரேன், இரேன், மகான், லகான்,
எனும் பலர் விரும்பும் இனிய பாட்டனார்.

இன்னும் அன்னாரவர்கள்—
லண்டன், கனடா, இருட்கண்டம் ஆபிரிக்கா,
நய்ஜீரியா, சீனா, நய்ரோபி, கென்யாட்டா'
சிங்கப்பூர், சென்னை, சிறீ லங்கா என்று பல
பட்டணம், நாடு தோறும்
பலப்பல தொழில்கள் பார்க்கும்
டக்ற்றர்கள், எஞ்சினீயர்
எக்கவுன்ற்றன்ற்களான

சுற்றங்கள் உள்ள புள்ளி.
சொற்பங்கள் அல்லர்—
அன்னார்.

அன்னாரவர்களின் பூதவுடல்,
மன்னார், மதவடி மயானத்தில்
ஐந்தரை மணிக்குத் தகனமாகுமாம்.

அறிவிப்பாளர் மூச்சு விடுகிறார்.
அன்னாரவர்களின் இறுதிச் சடங்கிலும்
அன்னாரவர்களின் அருமை பெருமையை
அன்னாரவர்களின் அன்புக்குரியார்
சொன்னார், சொன்னார்.
சொரிந்தார்—சொல் மழை.

அந்த வேளை,
செத்த வீட்டில் ஓர் செத்தை அருகிலே
முடங்கி இருந்த முத்து வாத்தியார்
தமக்குள் நினைக்கிறார், பின்வருமாறு—

'அன்னாரவர்கள் அன்னார் அவர்கள்—
சொன்னார் இவர்கள், திரும்பவும் திரும்பவும்.
அன்னார் அவர்களா, அந் நார் அவர்களா ?
அப்படியானால், அவர் ஒரு நாரா ?
இன்னும் ஓர் ஐயம் எழுகிறது அல்லவோ ?
பூதவுடல் என வானொலி மூலம்
அறிவிப்பாளர் அறைந்துள்ளாரே.
நார்போல் உடலம் பூதமாய் மாறுமோ ?
காலமானபின் அனைவரும் பூதமோ ?

வயோதிப காலம் வந்ததன் பின்னர்
கண் புகைச்சலினாற் காட்சி மங்கி
மூலையிற் கிடந்த முத்து வாத்தியார்
இப்படியாக எண்ணினார்.
தப்பென அதனை நாம் சாற்றுதல் கூடுமோ ?
*1984*

# 4

# வெளிச்சம்

# பழங்கதை

முந்தை நாள் நாம் சில பழங்கதை கட்டினோம்.

உண்ட களைப்பால் உறங்கி எழுந்தபின்
அந்தக் கதைகளை அவிழ்த்துப் பரப்பினோம்.
மேலதிகார மேம்பாடுடையவர்
பொழுதெலாம் ஏப்பமும் போதையும் நிரம்ப
நடத்தும் வாழ்க்கையை நாற்பதாற் பெருக்கி,
தேவலோக சீவியம் வகுத்தோம்.

மேலதிகார மேம்பாடற்றோர்
கந்தலும் பசியும் கண்களில் நீரும்
—ஆகிய இவைகளே அனைத்துமாய்
வாடி
உழல்கிற வறுமைச் சுடுதுயர் கண்ட நாம்
அத்துயர் நிலைமையை ஐம்பதாற் பெருக்கி
நரக லோக நலிவினைப் புனைந்தோம்.

அமரர், நரகர், அவுணர், இராக்கதர்,
இயக்கர் நாகர் என்பவரிடையே
மன்னன், மந்திரி, பணியாள் முதலிய
பதவிப் படிகளும் வகுத்துப் படைத்தோம்.
காதலன், காதலி, கயவன் முதலாம்
சிக்கலும் சிடுக்கும் பிக்கலும் இயற்றினோம்.
அஸ்திரம், ஆயுதம், சத்துரு, தோல்விகள்
வெற்றிகள், மீட்சிகள் மிகவும் நிறைத்தே
முந்தை நாள் நாம் சில பழங்கதை கட்டினோம்.

## 2

கட்டிய கதைகளை ஏட்டிலே தீட்டிய
குருக்களோ ஏட்டையே கும்பிடத் தொடங்கினார்,
தூப தீபம் காட்டினார்,
துதித்தார்.
இடையிடை அந்த ஏட்டையும் திருத்தினார்.
வசதிப்படி, சில மறைபொருள் வாசகம்
சேர்த்துப் புதுக்கினார்—சிறப்புக்கள் செய்தார்.
ஆட்சி ஆசனம் அமர்ந்தோர்க்கிசைவாய்
ஒரு சில ஷரத்துகள் ஒட்டியும் கொண்டார்.

குருக்கள் ஐயா கொள்கைகள் பேசினார்,
நேற்று நடந்த நிகழ்வுகள் இவையாம்.

## 3

இன்று நம் குருக்கள் எம்மிடம் வருகிறார்.
முந்தை நாள் நாமே கட்டிய கதைகளைக்
கட்டளைச் சட்டம் என்று காட்டுவார்.
ஏட்டிலே உள்ளவை எவற்றையும் ஏற்பதே
சீல நெறி எனத் திருவாய் மலர்கிறார்!
ஷரத்துகள் காட்டிச் சட்டம் பேசிக்
கோட்டிலும் ஏறுவார், கொள்கையை நாட்ட!

வியாக்கியானங்களும் விருத்தியுரைகளும்
மாபாடியங்களும் வகுத்து விரிக்கிறார்.

அவரோ மிகவும் அடித்துப் பேசுவார்
நெடுக, நெடுக நம் செவிகளில் அவர்தம்
ஆதரவாளரின் குரல்களும் அதைக்கும்.
முந்தை நாட் கட்டிய கதைகளை
நாமே இன்று நம்பி வருகிறோம்.

*1974*

# பம்மாத்து

வறியவராய், அறிவிலராய்ப்
பல பேரை விட்டு வைத்தால்,
தங்கள் சொந்தச்
சிறியதொரு வட்டத்துள்
சொகுசெல்லாம் கிடைக்கும் என்று
கனவு காண்போர்
புறுபுறுப்பார், முணுமுணுப்பார்—
அந்தரங்கமாய்.

வெளியில்....
பொய்கள் பேசி
நெறி என்றும் சிவம் என்றும்
திருத்த சபை, கலாசாரம்
என்றும் கூறி
முறை சிறந்த மகான்களாய் வாழ்ந்திடுவார்—
சன மந்தை மொய்த்துச் சூழ!

*1966*

# பொய்க்கால்

நெஞ்சு பொறுக்கா நிலை ஒன்று—
நினைத்துப் பார்க்க மனம் வேகும்.
நெடுநாள் எமது மக்கள் தமை
நெருக்கிப் பிடித்த கொடும் பீடை—
பிஞ்சு மனங்கள் பழுக்காமற்
பிசகி வெம்பிப் போம்படியாய்ப்
பேசப்படும் பொய்த் தத்துவங்கள்
பிதற்றிப் பிதற்றி நாள் கழிக்கும்
பஞ்சச் சிறுமை;
பாலர்களைப்
பள்ளிப் பொழுது தொடக்கம்
இகப்பலனில்
வெறுப்பைத் தரும் விதமாய்ப்
பயிற்றிப் பயிற்றி வந்த பயன்—
இந்தப் பிறவிப் பலனை எல்லாம்
இனிமேற் கிடைக்கும் பிறவிகளில்
எய்தல் கூடும்; எய்திடலாம்;
எய்தல் தானே மேன்மை எனல்.

இன்று நாளை—இவைபற்றி
எண்ணம் இன்றி
வரும் பிறப்பை
எண்ணி எண்ணிச் செயல் துறக்கும்
இந்தப் பழக்கம்—
இனப்பண்பாய்

நின்று விட்ட காரணத்தால்
நித்த நித்தம் மிகச்சிறிய
நெருப்புத் தடியால் அகல் விளக்கை
நேற்று வரைக்கும் பற்றவைத்தோம்.
பின்னர் இன்று நாம் சிலபேர்
பெரிய பெரிய வீடுகளில்
பின்னேரப் பார் வேளைகளில்
பியானோ இசைக்குப் பின்புலமாய்
மின்னும் குமிழ்கள்—எலெக்ற்/றிக்(b)பல்(b)ப்——
மிளிரும்படியாய்ச் செய்தாலும்
மீதிச் சமூகம் இருட்டிடையே
விட்டு வைத்துத் துயிலுகிறோம்.

இனப்பண்பான செயல் நீப்பின்
இயல்பாய் அமைந்த விளைவாக
எவர்க்கும் சிறந்த விளக்களித்தல்
எம்மால் இயலும் எனும் துணிவே
நினைப்பில் இன்றிச் சுய நலத்தால்
நேரம் போக்கித் தொலைக்கின்றோம்.
கனக்க எதற்கு?
வியாபாரக்
கஞ்ச உணர்ச்சி படைத்தவராய்க்
காலை, இரவு, நண்பகலிற்
கனலும் வயிற்றை நிரப்புதற்கும்
மினுக்கி முகத்தில் நிறம் பூசி
வெளியூர்களுக்குச் செல்வதற்கும்
விருப்பங் காட்டும் அதுவன்றி
வேறு நோக்கம் இல்லோம் நாம்.
திட்டம் ஏதும் அறியோம் நாம்.
செய்கை வலிமை அற்றோம் நாம்
திருப்பித் திருப்பிச் சிலை நாட்டிச்
செய்யும் விழாக்கள் பல நூறு!
பட்டம் இருந்தும், படிப்பிருந்தும்,

பழமை கிளறி
முன்னோரைப் பாராட்டுதற்கே
அவற்றை எலாம்
பாழில் இறைத்து வருகின்றோம்.
வெட்டை வெளியிற் பந்தலிட்டு
விளக்குப் பூட்டி, காட்போட்டில்
வேறு வேறு பொம்மைகளை
விரிவாய் அமைத்து விழாச் செய்வோம்.
எட்டப் பறந்து பாரீசில்
இருக்கும் வெள்ளைக் காரர் முன்
எங்கள் புராணப் பெருமைகளை
எடுத்துப் புளுகத் துடித்தெழுவோம்.

எதையும் புளுகித் திரிகின்றோம்.
இதிலே அளவு கணக்கறியோம்.
எங்கள் மொழியைப் புளுகுகிறோம்.
இந்து மதத்தைப் புளுகுகிறோம்.
மதியில் எவனோ போய் இறங்க
மட்டக்களப்பில் ஓர் அறிஞர்
மான் என்பதுவே அம்புலியின்
மறுபேர்; அதுவே மூன் ஆகிப்
புதிய மேற்குப் புல மொழியிற்
போயிற்றென்று புளுகிடுவார்.
புவியில் நாமே மதிக்குப் பேர்
புனைந்தோம் என்றும் இதம் அடைவார்.
கதியொன்று அறியோம்.
வெறுவாயைக்
கடித்து மென்று திருப்தியுறும்
கடைகேடெண்ண, உண்மையிலே
கண்ணீர் பெருகும்; மனம் வேகும்.

எழுத்துத் துறையில், கலைத்துறையில்
ஏதோ சில பேர் சாதனைகள்

இயற்றியுள்ளார் என்றாலும்,
இவற்றைப் பகுத்தும், இனங்கண்டும்
வழுத்த அறியா மூடர் நாம்.
வருந்தி வருந்திப் பதர் தூற்றும்
மண்டூகர்க்கு விழா எடுத்து
வானில் வைத்துப் புளுகிடுவோம்.
கழுத்தை நெரித்துத் திருகிடுவோம்—
கலையில் உண்மைத் திறங்கண்டால்.
கசட்டு வெறுமைப் புலம்பலையோ
கையால் அணைத்து வரவேற்போம்.
சயிக்கிள் மெக்கானிக்குகளை
ஸயன்ற்றிஸ்ற் என்று புளுகுதல்போல்
சாதாரணரை மேதை எனத்
தயக்கம் இன்றிப் புளுகிடுவோம்.

புளுகர் சமூகம் ஆனோம் நாம்
பொய்களிடையே, பொய்க்காலால்,
பொய்யை நம்பி, பொய் விரும்பிப்
போக நினைந்து நடக்கின்றோம்.
அளவு கணக்கே அவசியமாம்.
அதனை அறிதல் பிரதானம்.
அந்த வகையில், நுட்பவியல்
அறிவும் கொஞ்சம் துணை செய்யும்.
களவு, வஞ்சம், அநீதி, மடம்,
கபடம், சோம்பல், அறியாமை
களைதல் தானே தலையறமாம்,
களையச் சிறிதும் முயலாமல்,
உள நம் துயிலை எண்ணுகையில்....
உள்ளம் வேகும்.
நோக்கமிலா
உடலோர் ஆகும் நிலைமையினை
ஒழிக்க ஏதும் செய்வோமா?

*1970*

# அடியும் முடியும்

எலியினது குடலிடையும்
நுணுக்குக் காட்டி இயல்விக்கும் தரம்வரையும்
நுனித்துப் பார்த்தோம்.
வலு மிகுந்த றேடியோத் தொலைக்காட்டிக்குள்
வசப்படுத்தத் தக்க அளவு
ஆகாசத்தின் பல இயல்பை
அனுமானப் பார்வைகொண்டு பகுத்தறிந்தோம்—
வெளியினது நிகழ்வுக்கால நிலையறிந்தோம்.
எதிர்வுரைத்தோம்.
பழங்காலத்தை
நிச்சயிக்கும் கணிப்புகளும் செய்துவிட்டோம்.

இக்காலத்து இயல்கொண்டு கணக்குப் போட்டோம்.
எதிர்காலப் போக்குகளை முன் அறிந்தோம்.
முற்கால மருமத்தை ஒதுக்கி நீக்கி
முன்னேறல் ஆனோம் நாம்—முடிவில்லாமல்
அப்பாலும் அப்பாலும் நெடிது செல்ல
அதற்கப்பால்.... அதற்கப்பால்...
திகைத்து நின்றோம்.
நிற்காமல் மிக மெதுவாய்ப் பின்னும் செல்வோம்—
நிகழ்ச்சிகளின் திருவடியைக் காண எண்ணி.

எதிர்காலப் போக்குகளை அறிதல் அன்றி
இயன்ற வரை அதை மாற்றும் போராட்டத்தும்
விதவிதமாய் முயலுகிறோம்—
விரும்பத்தக்க விளைவுகளும் பெறுகின்றோம்.

முடியை நோக்கி
அதிவிரைவாய் முன் சென்ற உந்தல் குன்றி
ஆயாசம் கொண்டமையால் தள்ளாடுற்று
மெதுவாக அசைகின்றோம்,
எதிர்வுப் போக்கின் மேல்முனையை—
திரு முடியைக் காண எண்ணி.

எட்டும் இனி என நினைத்தோம்.
ஐந்தடிக்குள் இருக்கும் என்று சென்றாலோ....
இன்னும் சற்று மட்டும் ஒரு சிறிது செலின்...
கைகளுக்குள் வசப்படுதல் நிசம் என்று
நிச்சயித்தோம்.
கிட்டுவது போல் இருந்து,
கிட்டாதாகி,
கிடையாத தோற்றரவோ என ஐயுற்று
நெட்டுயிர்த்தோம்; ஆனாலும்...
மீண்டும், மீண்டும்,
நிமிர்ந்தெழுந்து மறுபடியும் நகரல் ஆனோம்.

அடிமுடி தேடும் படலம்
இடையீடின்றி
ஆதியும் அந்தமும் இன்றிப் படிக்க வேண்டும்;
விடமுடியாது அதை என்ற வேட்கையாலே
வேறெதற்கும் நேரமில்லை. எங்களுக்கு.
தடுபொடி தான் ஓயாது.
தலையைச் சாய்க்கச் சமயமில்லை.
உறங்குவது சரியுமில்லை,
விடுதலையை நோக்குகிறோம்.
தயவு செய்து
வெவ்வேறு திசை நோக்கச் சொல்லாதீர்கள்.

*1963*

# ஆராரோ ஆர் அவரோ ?

—உழைப்பதற்கு வலுவிருக்க
உள்ளத்தில் திடமிருக்க,
பிழைக்க வழி ஏன் இல்லை?
பேசுங்கள் தோழர்களே!

— பிழைக்க வழி இல்லாத
பிற்போக்கு நிலைமை இங்கு
விளைக்க நிலம் இல்லாத
வேதனையால், தோழர்களே!

—உருக்குப் போற் கையிருக்க
உரமான உடல் இருக்க,
'கரைச்சல்' எமை வருத்துவதேன்?
கவலைகள் ஏன், தோழர்களே?

—கரைச்சல் எமை வருத்துவதன்
காரணந்தான் யாதெனிலோ
உழைப்பதனை ஒரு சில பேர்
உறிஞ்சுதல்தான் தோழர்களே!
ஆழ்ந்தகன்ற அறிவுடையோம்
ஆக்கமுள்ள திறன் உடையோம்
வீண்மனிதராய் நாங்கள்
விடுபட்டோம் தோழர்களே.

—வீண் மனிதர் போல் நீங்கள்
விடுபட்டீர்; உம் அறிவை

நீங்கள் எமக்குதவாமல்
நின்று விட்டீர் ஆகையினால்.
வருந்தி நொந்துவேலை செய்தும்
வாழ்வில் எங்கள் துயரநிலை
திருந்தவில்லை; ஏன்? இதனைத்
தேர்ந்துரைப்பீர் தோழர்களே!

—திருந்தவில்லை எங்கள் நிலை
திருடுகிறார் நம் உழைப்பை.
அருந்துகிறார் அதன் பயனை
ஆராரோ; ஆதலினால்!

—வஞ்சமின்றி வேலை செய்தும்
வருமானம் கூடவில்லை.
கஞ்சியில்லா வேதனை ஏன்?
கயவர்கள் ஆர், தோழர்களே?

—கஞ்சி இல்லா வேதனையைக்
கட்டி வளர்க்கின்றவர்கள்
மஞ்சங்களில் துயிலுகிறார்
மது மயக்கில், தோழர்களே!

1970

# வெளிச்சம்

வீடு முற்றும் இருட்டு மண்டிக் கிடக்கும் வேளை
விஷப் பூச்சி புளுக்களுடன்
சிலந்தி, பாம்பும்
ஓடி அங்கு விளையாடித் திரிதல் கூடும்.
ஒளி கிடைத்தால் அவற்றை எல்லாம் ஒழித்தல்
கூடும்
நாடு முற்றும் இருட்டு மண்டிக் கிடக்குமானால்,
ஞாய சபை நூறிருந்தும் நன்மை உண்டோ?
கேடு கெட்ட அறியாமை இருள் நீங்காமல்,
கிடைக்குமோ மருந்துக்கும், நீதி ஏதும்?

கண்ணாடி புகை மூடிக் கறுத்திருந்தால்,
கட்டாயம் விளக்கின் ஒளி மங்கும் தானே!
சுண்ணாம்பு பூசி அதைத் துடைக்க வேண்டும்
சுத்தமாய், துப்புரவாய்—
வெளிச்சம் கூடும்.
தண்ணீரிற் படர்ந்திருக்கும் பாசி நீக்கிச்
சரி செய்தால் அல்லவோ, தூய்மை தோன்றும் ?
கல்லாமை என்கின்ற புகையை ஊதக்
கனல் வீசி ஒளி பிறக்கும்.
கல்வி மூளும்.

கல்வியினை மூட்டுகிற உபாத்தியாயர்
கட்டாயம் அறிஞராய் இருக்க வேண்டும்.
பல்லுடைக்கும் பழம்பாட்டின் கருத்துச் சொல்லப்
பழகி வைத்த படிப்புமட்டும் போதாதன்றோ!

புல்லு நுனிப் பூப்போலே மொட்டவிழ்க்கும்
புதுப்பாட்டின் அருமைகளும் அறிதல் வேண்டும்
வில்லெறியும் அம்பைப்போல் இலக்கைத் தாக்கும்
விசையான சொல்லாற்றல் மிகவும் வேண்டும்.

கணக்கறிந்து, தொழில் நுட்பம் அறிந்து,
சொந்தக் கைவினையின் திறனடைந்து,
கலங்கிநிற்கும் உணர்ச்சிகளைத் தெளிவித்து
வாய்க்கால் கட்டி ஓடவைக்கும் திறனடைந்து
விஞ்ஞானத்தை—
பிணக்குகளுக்காக அன்றி
அமைதிக்காகப்
பேணும் ஒரு மனப்பான்மைப் பேறடைந்து
மணக்கின்ற கலைச்சுவைகள் வளர வைக்கும்
வாய்ப்புடைய அறிஞர்களே உபாத்தியாயர்.

கிளிப்பிள்ளைப் பாடத்தால் நன்மை என்ன?
கேள்விகளைச் சரியாகக் கேட்டால் தானே,
துளிப்பிழையும் இல்லாத விடை கிடைக்கும்?
தூண்டினால் அல்லவோ துலக்கம் தோன்றும்?
வழிப்படுத்தத் தெரிந்தவர்தான் உபாத்தியாயர்.
மாணவர்கள் அந்த வழி நடக்க வேண்டும்.
விளக்குப்போல் ஆசிரியர் இருப்பாரானால்...
விளக்குகளாய் மாணவரும் ஒளி விடாரேரா?

*1981*

## நிமிர்வு

அன்புடையீர்
கொஞ்சம் அமரும்.
சில வார்த்தை—

உங்கள்மேல்
நாங்கள் ஒரு சிறிதும் கோபம் இல்லோம்.
பொங்கு சினங்கள், பொறாமைகளை நாம் அறியோம்.

ஆனாலும் நீங்கள் அறிவீரோ ?
எம் உழைப்பால்,
தானே எமக்கு வரத்தக்க நற்பழத்தின்
தேனான சாற்றைத் திரட்டி விழுங்குகிறீர்.

ஒன்றிரண்டு சிந்தல் உதவுவீர்,
அவ்வளவில்
நின்று விடுகின்றீர்.
நீங்களெல்லாம் தொல்லையின்றித்
தின்று குடித்துத் திருவிழாச் செய்வதற்கும்
குண்டுகளைப் போட்டு,
குடல் பிடுங்கி மாலைகளாய்க்
கொண்டு களித்து ஊழிக் கூத்து நடத்துதற்கும்
அண்ட வெளி எங்கும் ஆட்சி புரிவதற்கும்
உண்டு வசதி என்றால்....
ஒன்று தெரியுமோ ?

அடிப்படைப் பண்டம் அனைத்தும் நாம் செய்வோம்
முடிப்பவர் நீங்கள்.
முடித்த பண்டம் விற்பீர்.
எடுப்பீர் இலாபம்.
இதனாலே, செல்வர்—நீர்.

ஆக்கத்தின் ஆதி முதல்வர் நாம்.
எங்களை நீர்
ஏக்கத்தில் வைத்தே இயக்க நினைக்கின்றீர்.

உந்த நினைப்பை உடைத்து நொருக்கோமோ ?

உங்கள்மேல் நாங்கள் ஒரு சிறிதும் கோபம் இல்லோம்.
பொங்கு சினங்கள், பொறாமை இல்லை.
என்றாலும்.......

நீதி வளைந்தால் நிமிர்த்தத் தயங்கோம் நாம்.

*1981*

## காலம் மாறும்

'சடசடென வெம்பகையை முறித்து,
சுக்கற் சலாகைகளை
எரிக்குணவாய்த் தருவோம்' என்றோம்.

'அடிப்பிடிகள், பலவந்தம், இத்தியாதி
அக்கிரமம் இல்லாமல் வெற்றி பெற்றால்,
கடவுளரும் கைதட்டிப் புளகம் கொள்வார்;
கற்றதனால் ஆய பயன் அதுவே' என்றீர்.
'குடை பிடித்தால் வெயில் எறிப்பின்
தொல்லை போகும்;
கோடாரியல் தறித்து என்ன லாபம்?' என்றீர்.

பொறுத்துத்தான் பார்த்திருந்தோம்.
நிலைமை, மேலும்
புதியபடி மோசமாய் இழந்ததன்றி,
வெறுத்தொதுக்கத் தகுந்த நிலை திருத்தம் எய்தி
மேன்மை மிகு நிகழ்காலம் விரியவில்லை.
வறுத்தெடுத்துக் குடித்தலுத்தோம்; பயனைக்
காணோம்.

வருந்துகிறோம் நோயாலே!
ஊசி ஏற்றி,

பெறத்தகுந்த அருமருந்தைப் பெறுமாறு ஊட்டிப்
பிசகொழித்தல் மறக்கருணை.
வெம்மை அன்று.

நீதி நெறி அதுவேதான்.
அது அல்லாமல்,
நெட்டை மரம்போல் நின்று புலம்பல் அன்று.
பாதிவழி வந்துவிட்டோம்.
பின்னும் நாங்கள்
பழைய இடம் சென்றடைய நினைக்கலாமோ?
ஆதியிலே முன்னவர்கள் வகுத்துத் தந்த
அறநெறியைச் சாந்தாக்கி அடிக்கல் நாட்டி
மேதினியை நலமாகப் புதுக்கிக் கட்டி
மேலெழுப்ப முயன்றால் தான் காலம் மாறும்.

**1965**

# அறிவெழுச்சிப் பொங்கல்

மண்டிக் கிடக்கும் மடமை கெடுப்பதுபோல்
எண் திக்கும் பொன்னொளியை ஏற்றி
இருள் துண்டிக்க
வந்து கிழக்கில் மலர்கின்றான் ஞாயிறு, பார்.
புந்தி மகிழ்ந்து புகழ்.

ஆண்டு முழுதும் உழைத்த உழவர்கள்
பூண்ட முயல்வின் பொலி பயனாய்
நீண்டிருக்கும்
நெற்கதிரை அன்பால் நெகிழ்ந்து தடவுகிற
பொற்கதிர்க்குப் பொங்கல் புரி.

வேலைக்குத் தக்க விளைவு கிடைக்கும் ஒரு
பூமியைக் காணும் பொருட்டாக
மேல் நடக்கும்
அன்பர்களை வாழ்த்தி அறிவெழுச்சிப் பொங்கலிடு.
துன்பமின்மை நாட்டத் துடி.

விஞ்ஞான நோக்கால் விடிவை விளைத்திடுதல்
எஞ்ஞான்றும் கூடும் எனத் துணிந்து
முன்னேறு.
கண் மறைக்கும் தீய கருமை விரட்டி,
அதோ,
விண் எறிக்கும்,
பாராய்—
வெயில்.

*1968*

# 5

# மாற்றங்கள்

# அகிலத்தின் மையங்கள்

தனிமையில் நின்றேன், வயல் வெளி நடுவில்,
என்னைச் சூழ எழுந்து வீசிய
காற்றில்
நெல் மணம் கமழ்ந்து கொண்டிருந்தது.
நாலு திசையிலும் பார்வையை ஓட்டினேன்.
எட்டுத் திக்கும் என் கட்புலம் புகுந்தன.
நிலத்தையும் நோக்கினேன்
நீல வானையும்
என் கண் கூர்மை எட்ட முயன்றது.
அடி வான் எனது பார்வையில் விழுந்தது.

மண்டலமிட்டு வளைந்த கோட்டிலே
அடுத்த சிற்றூர்ப் பனைகள் தெரிந்தன.
கண்ணுக்கெட்டிய தூரம் வரைக்கும்
ஓவென விரிந்த ஒரு வெளி ஆகையால்
வடக்கிலே இரண்டொரு மருதங்கன்றுகள்
தனித்து நின்று தலையசைத்து ஏங்கின.
பிள்ளையார் கோயில் மணி அசை கோபுரம்
மெள்ள ஒன்றியாய் வெளியில் நின்றது.

மேற்கிலே சூரியன் விழுந்துகொண் டிருக்கிறான்.
மண்டலம் இட்டு வளைந்தது—தொடுவான்.
இருள் மெதுவாக இறங்கவும்
வெள்ளிகள் கண்களை விழிக்கத் தொடங்கின.

அண்ணாந்து பார்த்தேன்—
அது ஒரு கரிய

பிரமமாண்டமான பெரிய கிண்ணியே!
வெள்ளிகள் கண்களை விழித்துச் சிமிட்டின.
பாதிக் கோளக் கவிழ்ப்பே வானமாம்.
நான் அக்கவிழ்ப்பின் நடுவிலே இருந்தேன்.
தரை ஒரு வட்டத் தட்டம்.
அத்தட்டின்
மையம் என் கால்களில் வந்து விழுந்தது.
தொடுவான் மண்டல வட்டமுங்கூட
நடுவிலே என்னையே நாட்டி வைத்தது.
எனக்குப் புலப்படும் அகிலம் முழுவதும்
என்னையே மையமாய்க் கொண்டு திகழ்ந்தது.
நானே மன்னன்—முதல்வன்—
நானே இறைவன் என்று நம்பினேன்.

நாலாம் தெருவின் நல்லதம்பியும்,
நயாகரா வீழ்ச்சியின் நதானியேல் ஃபிலிப்சும்,
குற்றாலத்துக் குமார் ஜெய்சிங்கும்
எஸ்கிமோ இனத்தவன் ஆகிய ஜோவும்
'நானே மன்னன்; நானே முதல்வன்;
நானே இறைவன்!'
என்று கூவினர்.

ஏனையோர் இதனை அறியார் போலும்!
நானே அகில நடுவில் இருப்பவன்.

'நானே அகில நடுவில் இருப்பவன்.'

—இப்படி யாவரும் எண்ணலாயினர்.
தமிழகத்தாரோ தாம் நடு என்றனர்.
இலங்கையர் எனிலோ யாம் நடு என்றனர்.
மற்றொரு சிற்றூர் வயோதிபர்—
குருக்கள்—

சர்வமும் தமது தலையிலே எனவும்
எண்ணல் ஆயினார்—
இறுமாப்புடனே.

திருவாரூரிலே தேர்விழா நடந்தது.
ஒவ்வொரு 'நானினை' உள்ளே வைத்த
தலை பல ஆயிரம் சார்ந்தன ஒருங்கே.
அகில மையங்கள் ஆயிரம் ஆயிரம்
அங்கே கூடி அமர்க்களப்பட்டன.
எனக்குப் புலப்படும் எனது பேருலகின்
அண்ட சராசர மையம் நான் ஆயினும்
அகில மையங்களோ அநந்தமாம் என்பதைத்
தேர்விழா
செப்பமாய்
எனக்குப்
போதனை செய்து புரிய வைத்ததே.

*1969*

# எங்கள் சாதி

திருவாரூரிலே தேர் விழா நடந்த நாள்
பல பேர் அதனைப் பார்க்கக் கூடினர்.
மொய் மொய் என்று மொய்த்தனர், மக்கள்.
மக்களின் கூட்டம் மலைப்பைத் தந்தது.
தலைகள் அலைகளாய், சமுத்திரம் மக்களாய்க்
கலகலப்புடனே கம்பலை மிகுந்தது.
கம்பலை மாக்களைக் கற்பனை வலிமையால்,
திரட்டி எடுத்தொரு சிற்றுரு ஆக்கினேன்.
ஒற்றை மானுட உடலம் கொடுத்தேன்.

ஒற்றையன் என்னை உற்றுப் பார்த்தான்.
'சற்று நில்லடா, தம்பி' என்று
மெல்ல அவனை வியப்புடன் பார்த்தேன்.

'வியப்பதற்குரிய விந்தையன் அல்லேன்;
'ஒருவன்' என் பேர்' என
உணர்த்தினான், ஒற்றையன்.

'ஒருவனே, இரு!' என உரைத்தேன்.

'வருகிறேன் நான்' என
வணங்கிப் போயினான்.

எழுநூறாண்டின் முன்னரே நடந்த
பழைய கதை இது.
பலர் இதை அறியார்.

அனைவரும் இதனை அறிந்து கொள்ளட்டும்
என்ற ஆசையால் இதனைச் சொல்கிறேன்.
திருவாரூரில் என் செய்கையாற் பிறந்த
ஒருவனின் கதையை நான் உங்களின் பொருட்டாய்த்
தொடர்ந்து சொல்லுவேன் கேட்பீர்—
தயவு செய்து சத்தமில்லாமலே.

ஒருவன் கலைகள் பலவும் அறிந்தான்
உலகின் மருமம் துருவ முனைந்தான்
படரும், பரவும், எரியும் கனலின்
பதமும் குணமும் செயலும் அளந்தான்.
எலியின் குடலுள் நுழைந்து புகுந்தான்.
எதிலும் பொருவும் அதிர்வை உணர்ந்தான்.
புவியின் வயிறும் அகழ்ந்து பிளந்தான்.
புனலும் வெளியும் புரந்து கறந்தான்.

நெருப்பினது செயல் வலிமை உணர்ந்ததாலே
நீராவி எஞ்சின்கள் அமைத்துக் கொண்டான்.
பொருப்பை ஒத்த கப்பல்கள் புதிசாய்ச் செய்தான்.
பொடிப்பொடியாய்ச் சில ஊரைப் பொசுக்கத்தக்க
பெருப்பம் உள்ள சூழ்ச்சியங்கள் இயற்றிவிட்டான்.
பிறகென்ன?
'நான் இறைவன்' என்ற எண்ணம்
கருப்பமுற்று வளர்ந்து வர,
'ஒருவன்' தானே கடவுள் என்று
நினைவதற்கும் பழகிக் கொண்டான்.

ஆனாலும், இது பூமி சிறியதன்றோ?
அவதான நிலையத்துக் குழாய்க் கண்ணாடி
வானோரின் உலகத்து விபரங் காட்ட
மனிதகுல 'ஒருவனுக்கும்' ஆசை தோன்றும்
போனாலும் போவேன் நான் என்று நாடிப்
போடுகிறான், நுண்கணிதச் சமன்பாடெல்லாம்

பேனாவால் வரைந்ததுடன், உலோகத்தாலும்
பெரிய சில றொக்கெற்றுக் கட்டிவிட்டான்.
பரவெளியை அளப்பேன் நான்.
பசைந்து நாறும்
பழஞ் சகதி மண் பூமி.
புழு, பாம்போடி
அரைவதன்றோ—
இக்கரிய பற்றை மொய்த்த
அருவருக்கத் தக்க நிலம்!
பாறை, சூரை
மொரு மொரென்ற முட்புதர்கள்,
தீக்குழம்பாய்
மொடுமொடுக்கும் எரிமலைகள்
அகன்று, மேலே, உருவி
விண்ணைக் கடப்பேன் நான்
என்று சொன்னான்.
உடனே நான் திங்களுக்குப் போவேன்
என்றான்.

'திங்களுக்குப் போவதனால் என்ன லாபம்?'
சில பேர்கள் கேட்டார்கள்.

'ஐயா, நாங்கள்
அங்கொளிர்ந்து காட்டுகிற திங்கள் மண்ணை
அடைந்தாலே போதாதோ?
லாபம் அன்றோ?'
பொங்குகிற ஆர்வமுடன் 'ஒருவன்' சொன்னான்.
போய் இறங்கிப் பல தடவை மீண்டு விட்டான்.
சங்கதியை நாம் அறிவோம்.
நாளைக்கெல்லாம்
சந்திரனின் திடல் மனித ஆடற்கூடம்.

'சந்திரனில் இறங்கிவிட்டேன்;
இனி நான் அப்பால்,

சார்ந்திருக்கும் உடுக்களுக்கும் போவேன்'
என்றான்.
அந்தரத்திற் சுழலுகிறான்—அகிலமுற்றும்
அதற்கென்ன, செய்யட்டும்.
வாழ்க அன்னோன்.
இந்தளவில்
'ஒருவனை' நாம் தொடர்ந்து சென்ற
இக்கதையும் ஒருவாறாய் நிறைவை எய்தும்.
வந்து பின்னர் நம் நிலத்தில் இறங்குகின்றான்.
வான் சுழன்ற 'ஒருவன்' என்ற திருவன் வாழி.

## 2

'ஒருவன் கீழே இறங்கினான்; முழங்கினான்—
உலகுகள் பலப்பல உடையதாய் விரிந்த
அகில வெளியின் அமைப்பினைப் பற்றி
அறிவேன் மிகமிக; முயல்வேன் இனி இனி
இப்படிக் கூவினான்—
இன்னும் சொல்லுவான்—
'இயற்கையை அலசுவேன்;
இயலுமாறெல்லாம்
அறிவினை விரிப்பேன்
அகிலமும் என் வசம் ஆகாதென்பதை
அறிவேன் ஆயினும்
முயற்சியால் என்னிடம் முகிழ்க்கும் ஓர் பெருமிதம்'
மானிட ஆற்றலின் மகத்துவம் முழுவதும்
உணர்ந்த கிறுக்கனாய் 'ஒருவன்' நிமிர்கிறான்.
'ஒருவனை' உற்றுப் பார்த்தேன்.
'தம்பி, நீ யார்?' எனத் தட்டிக் கேட்டேன்.

## 3

'ஒருவன்' என்னை உணர்ந்ததும் குழைந்தான்.
முந்திய பெருமித முறுக்கும்

சிறிதே
குன்றியதேபோற் குலையலாயினான்.
'தம்பி, உன் தளர்ச்சியைத் தள்ளடா' என்றேன்.
எழுநூறாண்டின் முன்னால்,
ஒரு நாள்
திருவாரூரிலே, தேர் விழாப் பொழுதில்
மொய்த்த சனங்களின் திரட்சியே
இந்த
ஒற்றையன் ஆகிய 'ஒருவனாம்' தான் என
மீண்டும் நினைந்தான்.
மெய்யுணர்வடைந்தான்.
ஒருவனே பலராய் மறுபடி பிரிந்தனர்.
மண்ணுலகத்தில் மக்களாய்ப் பரந்தனர்.
பரந்த மக்களே நீங்களும் நாங்களும்.
அவர்களும் உவர்களும் அப்படியே தான்.

நாலாம் தெருவின் நல்ல தம்பியும்
நயாகரா வீழ்ச்சியின் நதானியேல் ஃபிலிப்சும்
குற்றாலத்துக் குமார் ஜெய்சிங்கும்
எஸ்கிமோ சாதியான் எனப்படும் ஜோவும்
அவர்களும் இவர்களும் எவர்களும்
'ஒருவனின்' சாதியார்—
உணர்கவே, உணர்கவே.

***1970***

# வெயில் போ

# மழை வா...

அன்றெல்லாம் நாங்கள் அறியா இளஞ்சிறுவர்.
குன்றருகே நின்று குழலூதிக் கொண்டிருப்போம்.

நித்தியமும் மாரி அந்த நீலமலைச் சாரலிலே.
சட்டென்று மின்னும்.
சடார் என்று வான் கறுக்கும்.
கொட்டோ கொட்டென்று — குபீர் என்று —
நீர் சொரிந்து
பாட்டமொன்று பெய்யும்.
பதுங்கிக்
குடிலுக்குள் நாங்கள் ஒதுங்கி
மழையைத் தவிர்த்திடுவோம்.
தேங்கி நில்லா வெள்ளமோ சென்று மறைந்துவிடும்.
தூர மலைகளிலே தொங்கிநிற்கும் வெண் முகில்கள்
ஈரம் மிகுந்து கறுத்து மழை பெய்யும்.
எவ்வாறோ பின்னர் இரவெல்லாம் போய் மறையச்
செவ்வானம் போடும்.
சிவக்கும் சிறு வெயிலாற்
கண் கூசி நாங்களோ, கையால் முகம் பொத்தி,
திண்ணையிலே ஏறித்
திரும்பி மறுபுறமாய்ச்
சோறு கறி காய்ச்சிச் சொதி வைக்கப்
போய்விடுவோம்.
வேறு விளையாட்டில் விண்ணகத்தை நாம் மறப்போம்.

அன்றெல்லாம் நாங்கள் அறியா இளஞ்சிறுவர்.
குன்றருகே நின்று குழலூதல் மட்டுமன்றிச்
சோறு கறி காய்ச்சிச் சொதிவைத்துச் சாப்பிட்டு
நித்திரையும் போவோம், நினைப்பில்—
விளையாட்டாய் !
சிற்றில் விளையாட்டின் மத்தியிலே
எம் தோழன் சுந்தரத்தான்
ஏதும் தொடங்குவான் பாட்டுக்கள்.
பந்தயங்கள் வைப்பான்.
பசாசுகளை வென்றடக்கும்
மந்திரங்கள் சொல்லுவான்,
மாயை செய்ய முன்வருவான்.
எல்லாரும் சேர்ந்தே எடுத்த பெருங்குரலில்,
ஓயாது பாட்டொன்றை ஒத்து முழங்கிடுவோம்.

வெயில் போ
மழை வா
வெயில் போ
மழை வா
வெயில் போ
மழை வா
வெயில் போ
மழை வா

ஓயாது பாட்டோ !
உணராது வான்முகிலும்.
காது செவிடோ ?
கதறும், எமக்காகச்
சற்றே இரங்கி மழை பெய்ய ஒப்பாது.
விட்டா விடுவோம் ?
விடாது நாம் பாடுவோம் !

ஈற்றில் மழை பெய்யும்.
எங்களது மந்திரத்தின்
ஆற்றலினை எண்ணும் நம் ஆனந்தம்,
அப்பப்பா,
சொல்லில் அடங்குமோ ?
சொற்பமோ எம் பெருமை !
அன்றெல்லாம்...
நாங்கள்
அறியா இளஞ்சிறுவர்.
என்றாலும்,
நாங்கள்
இயற்கையையும் ஆட்டி வைத்தோம்.
வேண்டும் பொழுதில் மழையைச் சொரிவித்தோம்
' வேண்டுதலால் '
மீண்டும்,
வெயிலை வரவழைத்தோம்.

எங்களது மந்திரத்தின்—மாய வித்தைத் தந்திரத்தின்—
ஆற்றலினை எண்ணும் நம் ஆனந்தம்,
அப்பப்பா,
சொல்லில் அடங்குமோ ?
சொற்பமோ, எம் பெருமை ?

1977

## அறிஞர்கள்

அன்றெல்லாம்....
எங்களுக்கோ ஐந்து வயதிருக்கும்.
சென்று படிப்போம், சிறியதொரு பள்ளியிலே.
சட்டம்பி பொல்லாதான்—
சற்றும் இரங்காதான்.
சட்டப் பிரம்பால், தழும்பு பட வெளுப்பான்.
அன்னான் அளிக்கும் 'பிரப்பம் பழங்களை'
நாம், வேறு வழி இன்றி
வெறுப்போடு அழுதுகொண்டு
வாங்கி மடி நிரம்பக் கட்டுவோம், வாய் பொத்தி.
ஓங்கி அவனை அடிக்க விருப்பந் தான் !
எவ்வாறு இயலும் ?
எனவே, நாம் பல்லை
இறுக்கிக் கடித்தபடி ஏற்போம், பரிசுகளை.
சட்டம்பி மாஸ்ற்றர்—தலைவன்—முதலாளன்.
இட்டது தான் சட்டம்.
' இவன் பாவி சாகானோ ? '
என்றும் சில பேர் நினைப்பதுண்டாம்.
அச்சிலரோ
பள்ளியிலே சாதுப் பரமர்களாய் வீற்றிருப்பார்,
கள்ளமும் சற்றவர்கள் பண்ணுவரே, என்றாலும் !

அந்தியிலே வீட்டை அடைந்தால்,
அதன் பிறகு,
சட்டம்பி என்ன ?
ஜகத்குருவே வந்தாலும்,

எட்டா மலையில் இருப்போன் எனப்படும்
அவ்வீசனே வந்தாலும்,
எம் தலைவர் நாங்களே.
எங்களுக்கு மட்டுமன்றி,
இங்கு முளைத்து நிற்கும்
புன்கு, பலா, வாழை, பூவரசு, வேம்பு
கிளுவை, விளாத்தி, கிடைச்சி முதலான
செந்துக்களுக்கும்
திடீர் என்று நாங்களே
ஆதிக்கம் மிக்க அதிகாரி ஆய்விடுவோம்.
செந்துக்கள், ஆமாம், செடிகள், மரங்கொடிகள்
எல்லாமே எங்கள் அடியார்.
எமை அடியா அன்னவைகள்.
நாங்கள் அவற்றை அடித்திடுவோம்.
கொய்யா மரத்திலே கேட்டி முறித்தெடுத்து,
மூசி விளாசி முறுக்கி அடித்திடுவோம்.
பாடம் படியாமல் விட்ட விளாத்திக்கும்,
நேரஞ் சுணங்கி வந்த நீட்டுப் பனைக்கும்
வகுப்பு நடக்கையிலே வாய்விட்டுத் தும்மின
பூவரசங் கன்றுக்கும்
போட்டு விளாசிடுவோம்—
பட்டை உரிந்து படுகாயம் ஆகுமட்டும்.

அன்றெல்லாம் நாங்கள் அறியா இளஞ்சிறுவர்.
கோபத்தை ஆற்ற ஒரு மார்கத்தைக் கண்டறிந்தோம்.
பச்சைச் சிறுவர் எனினும்,
ஒரு பாங்கான
உத்தி—உபாயத்தை உண்டாக்கிக் கைக்கொண்டோம்.

எங்கள் உணர்வின் வடிகால்கள் கண்டறிந்தோம்.

இன்றைக்கும்,
நாங்கள் எமது பயங்களுக்கும்,

சா, அச்சம், நோ, இடுக்கண், சந்தர்ப்பம்,
எங்களாற்
கட்டுப்படுத்த இயலாத சம்பவங்கள்—
தோற்றுவிக்கும் அந்தரிப்பு,
துக்கப் பெரும்பீடை
—இத்தனைக்கும் தீர்வாய்
இனிய சில உத்திகளைத்
தேடித் திரிகின்றோம்—
தெய்வங்கள் காணுகிறோம்.
தாயத்துக் கட்டி, தயிர்ப்பாளையஞ் செய்து,
மோதக பூசை முடித்துத் திரும்புகிறோம்.
நேர்த்திக் கடன்கள் நிறைவேற்ற முந்துகிறோம்.
சாந்தி, கழிப்பு, தரும உபசரிப்பு
என்றெல்லாம் ஓடி எதை எதைபோ தேடுகிறோம்.

அன்றெல்லாம் நாங்கள் அறியா இளஞ்சிறுவர்.
இன்றென்றால்....
நாங்கள்
வளர்ந்த அறிஞர்கள் !

*1977*

## சிற்றடி

ஒளியே, நீ பொருள்மேற் பட்டு
எம் உள்ளே
கண்வழியே போவாய்.
வெளி என்றும்
வீடு, காடு, விலங்கென்றும்
புழுக்கள் என்றும்
கிளி என்றும்
வடக்கு, மேற்கு, கிழக்கென்றும்
கிடக்கும் யாவும்
தெளிவித்துத் தெரிவிக்கின்றாய்.
தெரிந்து நாம் ஆற்றல் பெற்றோம்,

என்றாலும்,
'நீ யார்?' என்றால்
எல்லாம் ஓர் திகைப்பே.
உன்னை
மின்காந்த அலைகள் என்று
விளக்குவார் விளக்கிவிட்டார்.

மின் என்ன?
காந்தம் என்ன?

மிகச் சில செய்தி மட்டும்
இன்னவை பற்றி
நாங்கள் எவ்வாறோ ஈட்டிக்கொண்டோம்.

ஈட்டிய செய்தி அற்பம் என்றாலும்
அந்த அற்பம்
காட்டிய கருத்து நுண்மை—
கருவிகள் கொஞ்சமாமோ?
பாட்டையும் நாடா செய்தோம்
படத்தையும் நாடா செய்தோம்.
ஓட்டிய றொக்கெற் ஏறி
உலகையும் துளைத்துச் செல்வோம்.

விரிந்த இப்பிரபஞ்சத்தின்
மிகச்சிறு பகுதிபற்றித்
தெரிந்தவை கொண்டே
இந்தச் சித்திகள் இயலும் என்றால்....
உரம் பெற்று
எம் உள்ளே கெம்பும் ஊக்கத்துக்கு
எல்லை உண்டோ?
விரும்பினோம்—
உலகுபற்றி
மேன்மேலும் தெரிந்துகொள்ள.

உள்ளே போம் ஒளியே,
உன்னால்
உணர்விலும் ஒளி நாம் கொண்டோம்.
கொள்கைகள் கொண்டோம்
கொள்கைப் பயன்பாட்டால்
மேன்மை கொண்டோம்.
தெள்ளிய முழுமெய் நோக்கிச்
சிற்றடி பெயர்த்து வைப்போம்—
வெள்ளிடை மலைபோல்
உண்மை வெளிப்படும்
என்று நம்பி.

*1977*

# உண்மைதான் எமக்கு வேண்டும்

உண்மைதான் எமக்கு வேண்டும்.
ஒரு துளி பொய்யும் வேண்டாம்.
வெண்மையாய் ஒளிகள் கோடி
விண்ணிலே உண்டென்றாலும்
கண்செல்லா இருட்டுச் சூழல்
காட்சிக்குத் தடங்கல் ஆகும்.
எண்ணத்தின் துணையும் கொண்டே
எடுத்தடி வைக்கிறோம் நாம்.

உலகத்தின் இருட்டில்
எங்கள் உள்ளத்தின் விளக்கை ஏற்றிச்
சில சில உண்மை கண்டு
சேகரித்திருக்கிறோமே!
பல செயல் அநுபவத்தின்
பரீட்சைக்குத் தேறி வந்த
நலிவிலா உண்மையாலே
நயங்களும் கண்டுள்ளோமே!

சேகரித்திருக்கும் உண்மைச் செல்வத்தில்
பொய்ம்மையான
போலிகள்—செல்லாக் காசு—
புகுவதை விரும்பமாட்டோம்.
ஆகட்டும் என்று சொல்லி
அனைத்தையும் அள்ளிக் கொள்ளோம்.
நாலெட்டுத் திக்கும் தேடி
நலந்தரும் உண்மை சேர்ப்போம்.

நலந்தரும் உண்மை கொண்டு
நாம் எங்கள் உலகை மாற்றி,
பலம் பெறும் துணிவு கொண்டோம்.
பகை எல்லாம் தூள் தூள் ஆகும்.
பலந்தரும் என்று சொல்லி,
படு பொய்ம்மைச் சார்பை நாட
இடந்தர நாங்கள் ஒப்போம்,
ஏனென்றால்....மனிதர் நாங்கள்.

நம் வசம் உள்ள உண்மை
நாம் பெற்ற செல்வம் அன்றோ?
பொய்ம்மைகள் கலந்து கொண்டால்,
பொறுப்பது தருமம் ஆமோ?
எண்ணிய எண்ணியாங்கே
எய்திடல் வேண்டும் என்றால்,
உண்மைதான் எமக்கு வேண்டும்—
ஒரு துளி பொய்யும் வேண்டாம்.

*1978*

# என்றோ ஒரு நாள்

'என்றோ ஒரு நாள்
இது தான் நடந்திருக்கும்.'
பின் தூங்கி முன் எழூஉம் பேராசான் பேசினார்.
பின் தூங்கி முன் எழுவார் பேராசான்.
ஏனென்றால்....
பொன்போல் மதிப்பார் பொழுதை.
ஒரு கணமும் வீணாக்க மாட்டார்.
விழித்திருப்பார்.
ஆராய்வார்.

'எவ்வாறு தோன்றியிருக்கும்—பிரபஞ்சம்?'
இவ்வாறு கேட்டேன்.

இதற்குப் பதிலாகப்
பேசத் தொடங்கினார் பேராசான்.
காலடியில், கீழே அமர்ந்து
அவரைக் கேட்டிருந்தேன்—
மிக்க பணிவும் அடக்கமும்
பவ்வியமும் பூண்டபடி.
பின் தூங்கி முன் எழூஉம் பேராசான் பேசினார்—
'என்றோ ஒரு நாள் இதுதான் நடந்திருக்கும்—

'அந்த நாள்....
இல்லை, இல்லை,
ஆதியின் ஆதிப் போதில்

இந்த வான் இல்லை.
கோள்கள்
எவையுமே இல்லை.
விண்மீன்,
சந்திர சூரியர்கள்,
தகத்தகச் சோதி காலும்
எந்த ஓர் பொருளும் இல்லை.
இந்த நாள் நாளே இல்லை.

'காலம் என்று இதனைக் கூறக்
கருதினால்,
இதற்காய் நாங்கள்
காலம் என்பதற்குச் சொல்லும்
கருத்தையே விரித்தல் வேண்டும்.
நீலமும் சிவப்பும் இல்லா
நீள் இருட் சுற்றுச் சூழல்
ஓலமோ ஒலியோ இல்லை.
ஊமையாய் எதுவும் தூங்கும்.

'வெறு வெளி இருட்டி
யாண்டும் விரிந்தது—
கிடந்ததம்மா.
இறுகிய சடத்திண் கட்டி
இதனிடை விரிந்து தொங்கும்.
குறுகிய அறிவினோம் நாம்.
குறித்த அந்நிலையின் தன்மை
அறிவினால் நோக்கக் கூட
ஆற்றல் இல்லாதோர் நாங்கள்.

'குறியில்லை.
குணங்கள் இல்லை.
கும்பிட யாரும் இல்லை.
நெறி இல்லை.

நியமம் இல்லை.
நித்திரை—விழிப்பும் இல்லை.
மறி இல்லை.
மானும் இல்லை.
மனிதரும் இல்லை.
அந்த
வெறு வெளி இருட்டில்,
யாண்டும்
இறுகிய சடத்தின் கட்டி.

'சடத்தின் கூறு ஒவ்வொன்றுக்கும்
சக்திகள் இருந்தது உண்மை.
இடத்தில் வேறாகி,
வேறாய்,
இவை,
தனித்தனியாய் நின்றால்,
குடத்திலே ஆகாசம்போற்
குறை உயிர் இருந்திருக்கும்.
தொடர்ச்சியாய் வெறும் சடம்—
ஓம்—தொல் பொருள்—
விண்ணில் யாண்டும்.'

பேராசான் சொன்னார்.
'பிசங்கி' இடை நிறுத்தி
நான் ஓர் சிறிய வினாவைச் சமர்ப்பித்தேன்—

'முழுப்பொருள் அனைத்தும் நோக்க,
மொய்த்த அத்திரளில்
ஏதும் விழுப்பொருள்,
உணர்வு, ஞானம், 'வித்தியா'
இருந்திராதோ?
எழுச்சிக்கு முன்னால்...
இந்த

இயற்கை ஓர் 'மூடம்' தானோ?'
தொழுத்தகும் அவரை நோக்கித்
தொடுக்கிறேன்—இந்தக் கேள்வி.

'இதைப்பற்றி அறியோம் நாங்கள்'
என்றவர் தொடர்ந்தார் பின்னும்—
'விதைப்புக்கு முன்னர் வாய்ந்த
'வியழங்கள்' பற்றி எல்லாம்
கதிர் தள்ளப் பிறந்து,
தூளாய்,
கலயத்துட் கிடக்கும்
பிட்டின்
உதிர் துகள் பேசலாமோ?
உண்மையில்,
துகள்கள் நாங்கள்.'

இடை மறித்தமைக்காய்
நானோ
இதயத்துள் நொந்து கொண்டேன்.
தொடருங்கள் என்ற பாங்கில்,
சொல் இன்றி அமர்ந்து கொண்டேன்.
சடம் அன்று கிடந்தவாறும்
சக்தியின் விகசிப்பாலே
படார் என வெடித்துப் போந்து
படர்ந்ததும்
விரித்தார்—ஆசான்—

'விசை திறந்து இடித்து மூசி
விண் எலாம் நடுங்குமாறு
திசை தொறும்—திக்குத் தோறும்—
சிதறின சடத்தின் தூசி
அசுரமா வேகத்தோடே

அகன்றன, தூள் தூள் ஆகி
புசு புசு என்று
வாயுப்
புகார்க் குலம் கிளம்பிற்றம்மா!

புகைக் குழாம் பரந்து சென்று
புகுந்தது நெடிய விண்ணில்,
தகத்தகாயங்கள் தோன்றி,
சத்தங்கள், மின்னல் வெட்டு,
மிகுத்தன.
வாயு மாலை
மெல்லென அசைந்து
பாய்ந்து
சுகப்படல் அடைந்து
தொய்ந்து
துழாவின—விசும்பை எல்லாம்.

'ஊர்ந்தன, வாயுத் தூறல்.
உறழ்ந்தன.
ஒன்றோடொன்று
சேர்ந்தன.
அப்பால்,
மாறிச்
சிதைந்தன.
பின்னுப்பட்டு நூர்ந்தன,
நூராப் பாங்கர் நுழைந்தன.
நொதித்த கள்ளிற்
சார்ந்திடும் நுரையே போன்று
சடப்பொருள் திரியும், மாதோ!

'பீறின.
பீறிச் சென்று
பிழிபடல் போல நைந்து

கீறின.
கீறல் பொத்துக்
கிழிந்தன.
அழுந்தி வெந்து
வேறினம் ஆக மாறி
விழுந்தன.
முயங்கிப் பேர்ந்த
ஆறுகள் தோறும் எல்லாம்
அதிசயம் மிளிரும் அம்மா.

'சுழன்றது வாயுக் கீலம்.
சுருண்டது—குழைந்து பாய்ந்து.
கழன்றது.
கடுமை நொய்தாய்க்
கலைந்தது.
விழுந்து கெம்பி
உழன்றது—கறங்கி ஓடி.
உருண்டது—திரண்டு சிந்தி.
கழிந்தது காலம்—
இந்தக்
காரிய நிகழ்வின் போது

'பச்சைகள்,
நீலச் சாம்பற் பனி நிறம்,
மஞ்சட் செம்மை
கத்தரிப் பூவின் வண்ணக்
கலவைகள்,
நீயன் நீலம்,
கப்பிய கடுமையான
கபிலங்கள்,
பே'ப்பிள், றோசு

பற்பல நிறங்கள்
அந்தப்
பழமையாம் பொழுதிற் காணும்.

‘சடுதியாய் வெடித்த அந்தச்
சடப்பொருட் குவையினின்றும்
உடு என்றும்
கோள்கள் என்றும்
உறைந்தன—ஒவ்வொன்றாக.
திடும் என்று மோதல் போன்ற
சில செயல் தவிர
அண்டம்
பொடிபடாது.
அமைதி ஆகி,
பொது விதிக்கு அமைந்து வாழும்.

‘ஃபோற்றன்கள், இலக்ற்/றன் போன்ற
பொருள்களின் முயக்கத்தாலே
வேற்றியல் மூலகங்கள்
வெளிப்பட்டு,
சேர்வை ஆகி,
காற்றுப்போற் கலவை ஆகி,
காசினிப் பொருள்கள் ஆகி,
மாற்றமுற்று அமைந்தே
இந்த
வையத்தை ஆக்கும், தம்பி.

‘இவைகளை,
கணிப்பினாலும்,
இன்றுள்ள இயற்கை தந்த
சில சில சாட்சியாலும்,
சிந்தித்தால், உணரல் ஆகும்.
குவலயத் தோற்றம் பற்றிக்

கொள்கைகள் பிறவும் உண்டே.
அவை பிறர் மதமாம்.
ஆனால்,
என் மதம் இதுவே' என்றார்.

'உண்மையோ, பொய்யோ?
யார் தான்
உரைத்திட வல்லார்?
ஆயின்
உண்மையை நாடிச் செல்லும்
உரமுண்டு—நமக்கெல்லாமே!'
திண்மையாய் இதனைக் கூறிச்
சிரித்தனர் ஆசான்.
நானோ
எண்ணம் வேறாகி
அப்பால்
ஏகினேன், வணக்கம் கூறி.

பின் தூங்கி முன் எழூஉம் பேராசான், நேரத்தைப்
பொன்போல் மதிப்பார்.
பொழுதை அவம் போக்கார்.
அன்னார் கருத்தில், அகிலப் பிறப்பு இதுதான்.
என்றோ ஒரு நாள்.... இதுவா நடந்திருக்கும்?

*1970*

## ஒவ்வொரு பாகையாய்...

தொகையளவு மாற்றங்கள்
திரண்டு சேர்ந்து தொடர்ந்து
பின்னர்
பண்பியல்பு மாற்றம் ஆகும்.

பகைபோலும் முரண்களுமே
ஒருங்கு நிற்கும்.
பல வேளை
அவற்றிடையே பிணக்குத் தோன்றும்.

எதிர்மறுப்பின் எதிர்மறுப்பால்
எழுச்சி தோன்றும்.

இயற்கைக்கும்
சமுதாய இயக்கத்துக்கும்
விதிகள் இவை பொருந்துவன.
விடயஞ் சார்ந்து விளங்குவன,
இவ்விதிகள்—
உலகின் உண்மை.

**2**

சிறு துளி பல சேர்ந்து
பெருவெள்ளம் ஆகும்
தீப்பொறி மூண்டுவிடின்
பேரொளி தோன்றும்

சிறு துளி பல சேர்ந்து....
அறிவின் வியூகத்திலே
ஆற்றல்கள் ஒன்று கூடும்
ஆற்றலின் வெளிப்பாட்டில்
மாற்றங்கள் வந்து சேரும்

சிறு துளி பல சேர்ந்து....

உறவுகள் மோதினாலும்
உள் உந்தல் உதயமாகும்
உள்ளுந்தல் வேகம் கொள்ள
ஊக்கம் பெருகி ஓடும்.
பிறவிகள் புதுமை கொள்ளும்
பேதங்கள் இசைவு கொள்ளும்
பிணக்குகள் கருகி வீழும்
பேரொளி எங்கும் சூழும்

சிறு துளி பல சேர்ந்து...

**3**

—

சிறு துளிகள் பல சேர்ந்து
வெள்ளம் ஆகும்.
சீவியத்தில்
பரிணாமம் சிறு மாற்றத்தின் பெறுபேறு.
பரிணாமம் மட்டும் அன்றி,
பெருமாற்றப் புரட்சிகளும்
வாழ்வில் உண்டு.

**4**

—

ஒவ்வொரு பாகையாய்
வெப்ப நிலை ஏறும்.

உலைமேலே—
பால் பொங்கும் பானையில்

ஒவ்வொரு பாகையாய்....

அவ்விதம் ஏற,
புடைகட்டும், விளிம்பில்
அழகாய் நுரை கிளம்பும்
பொங்கிச் சரிக்கும்

ஒவ்வொரு பாகையாய்....

பொங்கும் பொழுது வரை
ஆயத்தம் செய்வோம்
பொழுது சரியாக
அரிசியை இடுவோம்.
எங்கும் எவரும் உண்ண
அன்னம் படைப்போம்
இயற்கையை ஆய்ந்து
பயன்கள் விளைப்போம்

ஒவ்வொரு பாகையாய்...

**5**

---

பழமைத் தாய் வயிற்றில்தான்
புதுமை தோன்றும்
பார்ப்பதற்கு
முரண்போன்று காணும் பண்பு
முழுமை ஒன்றின் உள்ளேயும்
புறத்தும் உண்டு
முரண்களது தீர்ப்பாலே—
வளர்ச்சி தோன்றும்.

## 6

பழமையின் வயிற்றில் புதுமை
பழங்களின் வயிற்றில் விதைகள்
தொழுத கை உள்ளும் படைகள்
துயில்களின் முடிவில் விடிவு

பழமையின் வயிற்றில் புதுமை....

தேக்கத்தின் நடுவே தெளிவு
திரைகளின் மறைவில், காட்சி
வாழ்க்கையின் நடுவே நலிவு
வருத்தத்தில் முளைவிடும் வலிவு
அம்மா—

பழமையின் வயிற்றில் புதுமை...

தொழில்களின் முடிப்பில் ஓய்வு
தோல்வியின் முடிவில் வெற்றி
பிழைகளின் அறிவில் திருத்தம்
பிணக்குகள் தீர்ந்தால் அமைதி
எய்தும்—

பழமையின் வயிற்றில் புதுமை...

## 7

முன் இருந்த நிலைமை ஒன்றை
இல்லையாக்கி முடித்துவிட்டால்
மறுபடி
அப்புதுமை தானும்
பின்னிடைந்து

பிற்போக்காய் அமைதல் கூடும்.
பின்னரும்
ஓர் எதிர் மறுப்பு நிகழும் என்ப.

## 8

இல்லை என்பதை இல்லை செய்குவோம்
எதிர் மறுப்பையும் எதிர் மறுப்பமே
முன்னர் ஓடிய திசையில் ஓடியும்
முகிலை நோக்கியே உயர ஏறுவோம்

இல்லை என்பதை....

சுற்றி ஏறிடும் பாதை ஆயினும்
தூக்கி எங்களை ஏற்றுமே அது
வெற்றி என்பது மேன்மை எய்திடல்
விரிந்த விண்ணிடை மேல் உலாவுதல்

இல்லை என்பதை...

இந்த வாறு நாம் ஏறும் ஏற்றமே
இனிய வாழ்நிலை காட்டும் மாற்றமாம்
அந்தம் முந்திய ஆதி ஆகுமோ?
அது புதியதோர் ஆதி ஆகுமே.
இல்லை என்பதை...

## 9

வரலாற்றின் கைகளிலே...
மனிதன் பொம்மை!
மன நினைப்பின் வாயிலாய்

உலகை மாற்றும் உரம் உடையான்
மனிதனுமே.
ஆனால்,
அந்த உந்தல்களும்
வரலாற்றின் பகுதி ஆகும்.
பெருகி வரும் வெள்ளம்போல்
திகழும் ஓட்டம்,
பின்னாலும் முன்னாலும் அவனை ஆட்டும்.

வரலாற்றின் போக்குகளை
விளங்கிக் கொண்டால்
மானுடனே
அதிகாரி ஆவான் என்ப.

## 10

வரலாற்றின் கைகளிலே
பொம்மையோ நாங்கள்?
மனத்து நினைவெல்லாம்
வாழ்வில் பலிக்க வேண்டும்

வரலாற்றின் கைகளிலே...

பெருகிடும் வெள்ளத்தில்
நாணலைப் போலே
பின்னாலும் முன்னாலும்
அல்லாடலாமோ?

வரலாற்றின் கைகளிலே....

காலத்தின் சக்கரம்
சுற்றி விரையும்

களி மண்ணை அதில் இட்டுக்
கையால் வனைவோம்
தேவைக்கு வேண்டிய
பாத்திரம் பெறுவோம்.
தித்திக்கும் பாலன்னம்
பொங்கிப் படைப்போம்.

வரலாற்றின் கைகளிலே....

## 11

—

ஒவ்வொரு பாகையாய்
வெப்ப நிலை ஏறும்
உலைமேலே—
பால் பொங்கும் பானையில்
ஒவ்வொரு பாகையாய்...

*1981*

## மாற்றங்கள்

பச்சை இலை மாவின் படர்ந்த நிழலிடத்தே
உச்சி வெயில்வேளை, உடலைக் களைப்பாற்ற
நிற்பதுண்டே நாங்கள்
எனினும்,
நினைவில் வந்து
முற்படவே இல்லை—
முனைப்புடைய செந்தளிர்கள்.

நேற்று வரை எங்கள் நினைவில் உறுத்தாத
ஆச்சரிய மாயை!
அளவிற் சிறிய பல மாற்றங்கள் கூடி
வளர்ந்து
இன்று காலையிலே
தோற்றும் வனப்புச் சுபசெய்தி
வாழியவே!

நுணுகிய மாற்றங்கள் நூறு—
பல கோடி
அணுவணுவாய்க் கூடி
அறியத் தகாத
குணம் உடைய ஆகி,
குடங்கிக் கிடந்து
எம்
உணர்வு கிளர்ச்சி பெற

உய்ந்தெழுச்சி எய்தினவோ!
மாந்துளிரின் மேனி
மணிச்சிவப்பும் மஞ்சளுமாய்த்
தோய்ந்து,
மரமே
சுடர்கிறது, பாருங்கள்.
காந்தி நிறைந்த அந்தக் காட்சி
மிகு கவர்ச்சி
வாய்ந்து துலங்குவதை
வாயார வாழ்த்துங்கள்.

இன்று வசந்தம்—இளவேனில்—
ஆகையினால்,
பொன்போல் நறுந்தளிர்கள்,
பூக்குலைகள், மொட்டுக்கள்.
அன்பாய் வருடும் அரிய இளந்தென்றல்...
நன்றே உலகம்.
நமக்கெல்லாம் கொண்டாட்டம்.

*1978*

## முன்னோக்கு

சென்றொழிந்த காலம் திரும்பிவர மாட்டாது.
குன்றிற் பொழிந்த மழையின் பெரு வெள்ளம்
ஓடைகளாய் மாறி, ஒருங்கு பிரவகித்துக்
கூடி இறங்கிக் குதித்துப் பெருவெளியில்
மாவலியாய் மாறி வரும், பெரிய ஆறாக.
தாவி வளைந்து சுழன்று நடந்து சென்று
நீலக் கடலடைந்து நீரோடு நீராகும்.
காலப் பெருநதியின் கால் நடையும் அப்படித்தான்.
ஓங்கி உயர்ந்த மலையால் இறங்கி வந்து
தேங்கி நில்லாதோடித் திரைகடலைச் சென்றடைந்த
தண்ணீர்
பிறகு திரும்பி மலைநோக்கி
அண்ணாந்து பார்த்தே
அணுகி
நிமிர்ந்தேறி
வந்த வழியே திரும்பி
மலையுச்சிச் சொந்த ஊர் செல்லத்
துளியும் இடமில்லை.
கீழ் இறங்கிப் போன நீர் கீழேதான் பின்னரும்
ஆழ இறங்கும்.
அது தான் இயல்பு வழி.
பள்ளத்திருக்கும் நீர் பாதையிலே ஏறாது.
துள்ளிப் படர்ந்து தொடருகிற காலமும்
சற்று நின்று பின்னோக்கித் தாமதிக்க மாட்டாது.
வெற்றி விளைந்தாலும், தோல்வி விளைந்தாலும்
என்னதான் எய்திடினும்
இம்மியும் பின் நோக்காது
முன்னோக்கும் என்றும் முனைந்து.

1967

# அடாத்து

திணையை விதைத்தவர் திணையை அறுக்கலாம்.
சுரையைப் புதைத்தவர், சுரைக்கொடி முளைத்து
வளர்ந்த பின்னர் சுரைக்காய் பறிக்கலாம்.
காலம் அறிந்து தண்ணீர் ஊற்றி,
உரிய எருவும் உதவி உழைத்தால்,
சுரைக்காய் பெரிதாய்ச் சுவை நிறைந்திருக்கும்.

எதுவும் விதையாது இருந்து கொண்டோர்
அடுத்த புலத்தில் விளைந்த பயிர்களை
இருட்டு வேளையில், திருட்டுத்தனமாய்
அறுத்துக் கவர்வதே அடாத்தெனப் படுவதாம்
இருட்டுத் திருட்டின் இழிப்பும் பழிப்பும்
சிறு குழந்தைக்கும் தெற்றெனப் புலப்படும்.

பட்டப் பகலில், பலர் பார்த்திருக்கக்
கொள்ளை அடிக்கும் குணமும் திறனும்
மிக மிக நுணுகிய உத்தியின்பாற்படும்.
உத்தி நுணுக்கம் உணர்ந்தவர் மட்டுமே
தோல் இருக்கையிலும் சுளையை வாங்குவார்.
சுளையை வாங்கும் சூழ்ச்சி,
அடாத்துள் அடாத்தென அறிதல் தக்கதே!

*1968*

# தேரும் சேரியும்

தேரினில் ஏறி
அவ் ஐந்து பேர்
குந்தி,
சில யுகமாய்
ஊரவர் ஏற்கக்
குசாலாய் அமர்ந்தே உறைந்துவிட்டார்.
சேரியில் உள்ள நாம் ஆயிரம் பேரும்
இத்தேர் இழுத்து
வேர்வை சொரியக் களைத்து,
தள்ளாடி விழுந்துவிட்டோம்.

பட்டுப் புடைவைச் சரிகைக் கரைகள்
பளபளக்க,
சட்டைகள், தொப்பிகள்
சால்வை மடிப்புச் சரசரக்க,
எட்டுப் புறமும்
குடைகள் விரிந்தே
இதம் அளிக்க,
திட்டம் இடாத செயலின்மையோடு
செம்மாந்து இருந்தார்.

பொன் சாமரைகள் இரட்ட,
பொரியல், குழம்பு வகை
மின்சார தீப வெளிச்சத்தில் உண்டு,
விறண்டி வகை,
ஜின் சாதிகளும் அருந்தி, இருந்தனர்.
ஏவறைகள் பின்சார

அன்னோர்கள்
தேரோடுகின்றார், பெருந்தெருவில்.

ஐந்து பேர் தேரில் அமர,
அவர்களை ஆயிரர் நாம்
நொந்து நூறாண்டுகள் பற்பலவாக
நொடிந்திழுத்து
நைந்துபோய் விட்டனம்.
நாலாபுறமும் நலிந்துழன்று
சந்துகள், மேடுகள், பள்ளங்கள்
எங்கும்
சலித்துவிட்டோம்.

வேண்டாம் இனி அந்தத்
தேரோடும் வேலை.
வெடி வெடித்துக்
கூண்டாயும் இன்றிக் குலைந்து பொடிந்யக்
குறுந்துகளாய்
மாண்டே சிதற
ஒழிப்பம் அத்தேரை---
மண்ணோடு மண்ணாய்.
ஆண்டாண்டு கால வழமையை மாற்ற
அடி எடுப்போம்.

இனிமேல் எதற்கொரு தேர்?
எமக்கெல்லாம்
எளிமையுடன்
தனியாக ஒவ்வோர் சயிக்கிள் இருப்பினும்
சால நன்றே.
குனியாது,
தேரின் வடம் பிடியாது,
கொடுக்கிழுத்து,
நனி மான மாண்புடன் ஓடுவம்.
எம் வழி நல்வழியே.

1971

# மண் சுமக்கின்றோம்

கைகளைப் பிடித்துப் பின்புறமாகக்
கட்டினீர்.
பலவந்தம் செய்தீர்.
உய்ய இவ்வுலகம் வேண்டுமேயானால்,
உம் மறம் அவசியம் என்பீர்.
நைய எம் செயல்கள் யாவையும் நசுக்கி
நாட்டினீர் உங்களின் செருக்கை.
ஐயகோ, நாம் எம் அவலத்தைப் பேச
ஆவென்று வாய்களைத் திறந்தோம்.

வாயினைப் பிரைந்தீர்
ஊசியிற் கோத்த நூலினால்!
வருந்தினோம்.
பதைத்தோம்.
போயொழிந்து உணர்வு கெடும்படி
மருந்து புகட்டவும் நினைத்திலீர்.
வலிந்து எம்
காய்வினை ஒடுக்கி முடக்கினீர்.
கொடிய
கயவரே,
சிறுமதியோரே,
ஆயிரம் சொல்ல நினைக்கிறோம்.
எனினும்,
அந்தகோ, வாயிலோம் தமியேம்.

கட்டை ஏன் அவிழ்த்து விடுகிறீர்?
ஏனோ
கடகமும் தருகிறீர்?

நும் மண்வெட்டியை
எதற்கு எம் பக்கம் நீட்டுகிறீர்?
மேலும் இவ்வரம்பினை எழுப்ப மட்டும்
எம் துணையை மதிக்கிறீர் போலும்.
வணங்கியே குழைவதேன், மட்டி?
சொட்டளவேனும் மானிதம் இருந்தால்,
துன்பம் நீர் தருவீரோ, எமக்கும்?

மண் சுமக்கின்றோம், வைகையின் கரையில்.
வையகம் வாழ்வதன் பொருட்டு.
கண்சிவத்தெம்மை ஒடுக்கிட வேண்டாம்.
கடைசியில், நாம் எவர் என்ற
உண்மையை உணரும் வேளையில், திகைப்பீர்.
உளம் மிக வருந்துவீர்.
வீழ்வீர்.
விண் கறுத்தின்று பகல்படு முன்பே
வெளிப்படும் சங்கதி முழுதும்.

பிட்டினை மட்டும் விரும்பியா
உங்கள் பிழைகளைப் பொறுக்கிறோம்?
பிள்ளை குட்டிகள் உடையோம்.
ஆகையால். இனியும்
குழையவும் நெளியவும் மாட்டோம்.
உட்பொருள் எல்லாம்—முழுவதும்—அறிவோம்.
உழைப்பினை வலிமையாற் கவரும்
தப்பிதம் அனைத்தும் தகர்படும்.
ஒழியும்.
சாந்தியும் தருமமும் தழையும்.

*1970*

# பொருளைத் திருடிட வேண்டாம்

பொருளைத் திருடிட வேண்டாம்
பொதுமைப் பட விடுவோம்
பயனைப் பல பல பேரும்
பகிரப் பழகிடுவோம்.

பொருளைத் திருடிட வேண்டாம்
பொதுமைப் பட விடுவோம்....

உடலைப் பிழிவது போலே
உழலப் பழகிய நாம்
உலகிற் பெறுபடு லாபம்
பகிரப் பழகிடுவோம்

பொருளைத் திருடிட வேண்டாம்
பொதுமைப் பட விடுவோம்....

வடவைக் கனல் எரி போலே
உடைமைச் சதி களைவோம்
வறுமைச் சிறுமைகள் யாவும்
மடியப் படை விடுவோம்.
கொடுமைப் பொருள் முதலாளர்
குகையைப் பொடி புரிவோம்
குடிலிற் பலர் நிதம் வாடும்
குறையைக் கழுவிடுவோம்.

பொருளைத் திருடிட வேண்டாம்
பொதுமைப் பட விடுவோம்....

பசியிற் புவியினர் சாகும்
நிலைமைச் சரி புரிவோம்
பழமைப் பிடியினர் வாதம்
ஒழியத் தொழில் பயில்வோம்
இசையிற் பயில் சுகநாதம்
எமதுட் புக நனைவோம்
இளமைக் கனி நய ஆடல்
இழையத் தொழில் புரிவோம்.

பொருளைத் திருடிட வேண்டாம்
பொதுமைப் பட விடுவோம்

*1970*

# பண்பு

இடி, மின்னல், பெருவெள்ளம், புயல் கண்டு
வெருவினோம்;
இயற்கை என்ற கொடிய பல சக்திகளை,
குமுறுகிற பல விசையின் கூட்டுச் சேர்ப்பை,
முடுகி வந்து முன்னெதிர்த்து
முடிக்கின்ற முற்றுகையின் மொய்ப்பைக் கண்டே
வெடவெடத்தோம்;
பரிதவித்தோம்;
விடுதலைக்காய் முயற்சி செய்தோம்.
மிக உழைத்தோம்,
உடலுழைப்பால் மன உயர்ச்சி உறலானோம்.
சிறிது சிறிதாக ஓங்கி—
இடர் கடக்கும் புது வழிகள்
எத்தனையோ கண்டுகொண்டோம்—
இயற்றிவிட்டோம்.

பரந்த நெடும் இயற்கை எனும்
பிரபஞ்சம் முழுவதிலும்
பயிலுகின்ற
நிரந்தர வாழ்வுடைய சில நியதிகளைக்
கண்டுணர்ந்த நியாயத்தாலே
விரைந்து முன்னே அடி வைத்தோம்.
விண்வெளிக்குள் மெல்ல மெல்ல
நுழையல் ஆனோம்.

கரந்துறைந்த நம் ஆற்றல்
விகசித்து வெளிப்படுதல்
கண்டு கொண்டோம்.
அருந்தி நுகர்ந்து—
எல்லோரும்,
ஆனந்தமாய் வாழும் அமைப்பை
ஆக்கின்....
பெருந்திறலும்,
விஞ்ஞானப் பண்பு ஈன்ற நற்பலனும்
பிரகாசிக்கும்.

*1966*

# 6

# கதி

# வாயடைத்துப் போனோம்

'ஏன் நண்பா, மௌனம் எதற்கு?'
என்று கேட்டிருந்தாய்.
வாயடைத்துப் போனோம்.
வராதாம் ஒரு சொல்லும்.

பொய் வதந்திக் கொள்ளி பொசுக்கென்று போய்ப்பற்ற
ஏற்ற வகையில்
இதமான நச்செண்ணெய்
ஊற்றி
அதில் ஊற வைத்த உள்ளங்கள் இல்லாமல்
இத்தனை தீய எரிவு நடைபெறுமா?

எத்தனை தீய எரிவு—தலையுடைப்பு,
குத்து வெட்டு, பாயும் குருதிக் குளிப்பாட்டு!

சற்று முன்னர் மட்டும் சகஜமாய்ச் சாதுவாய்ப்
பேசி இருந்த பிராணி
சடக்கென்று
வாரை இடுப்பாற் கழற்றி
மனங் கூசாமல்
ஓங்கி விளாச ஒருப்பட்ட சிந்தையதாய்
மாறிவிட்ட விந்தை மருமம் என்ன?
'சுர்ர்ரென்று'

*சீறி எதிர்த்த செயலின் கருத்தென்ன?*
கொள்ளை, திருட்டு, கொலைகள், கடையுடைப்பு,
பிள்ளை அரிவு, பிடுங்கல், வதை புரிந்து
*சீறி எதிர்த்த செயலின் கருத்தென்ன?*

ஒன்றும் எமக்குச் சரியாய் விளங்கவில்லை.
'திக்'கென்ற மோதல்— திடுக்கிட்டுப் போனோமே!
வாயடைத்துப் போனோம்.
வராதாம் ஒரு சொல்லும்.

***1978***

## இருட்டிலே தோன்றும் எண்ணங்கள்

முன்னொரு காலம் தன்னில்
மூத்தம்மை என்னும் வில்லி
தன்பாட்டில் இருட்டில் நின்று
தனக்குள்ளே யோசித்தாளாம்.

'சீப்பை ஒளிப்போம்.
கலியாணம் நின்று விடும்.
சீப்பை ஒளித்தால், தலை சீவ ஏலாது.
சீவாத் தலையோடு சிங்காரம் வேறேது?
பூ முடிக்க ஏலாது.
பொட்டு வைக்க ஏலாது.
மார்புப் பதக்கம், மணி மாலை, அட்டியல்
சூரியச் சுட்டி, பிறை வளைவு, தொங்கட்டான்,
மூக்குத்தி மின்னல்...
முடியாது சிங்காரம்.
சிங்காரம் இல்லா மணமகளை
யார் காணும் கொண்டு வருவார்—
மணவறைக்கு?
மேலும்,
அவளே விரும்பாள், அவைக்கு வருவதற்கும்.
ஆனபடியாலே சீப்பை ஒளித்து வைப்போம்."

இந்த விதமாக
வில்லி நினைத்தாளாம்.

அந்த விதந்தானோ அன்றோர் இரவிலும்
யாரோ சில பேரின் எண்ணம் இருந்திருக்கும்?

நூலகத்தின் மேலே நெருப்பைப் படரவிட்டால்
நூலகத்தில் வைத்திருக்கும் நூல்களெல்லாம் நீறாகும்.
நூல்களெல்லாம் நீறானால், கல்வி வளம் நீறாகும்.
கல்வி வளம் நீறானால், காசு வளம் நீறாகும்.
காசு வளம் நீறானால், ஆசைகளும் நீறாகும்.
ஆசை, முயற்சி, அவாக்கள், இலட்சியங்கள்
பேசி வரும் தத்துவங்கள்
நீறாகிப் போய்விட்டால்,
போட்டி இருக்காது.
போட்டியெல்லாம் நின்றுவிடும்

இப்படியாய்த் தானோ
இருட்டில் நினைத்தார்கள்?

முன்பொரு காலந் தன்னில்
மூத்தம்மை நினைத்ததே போல்,
தம்பாட்டில்,
இருட்டில் நின்று
சில பேரும் யோசித்தாரோ?

வேலி பயிரை வந்து மேய்ந்த
அந்த ஓர் இரவில்,
காசு வளங்கள் கரியான வேளையிலே...
இப்படியாய்த் தானோ இருட்டில் நினைத்தார்கள்?

*1981*

# அதொன்றும் தெரியாது

உலக அரங்கில்...
ஒரு மூலையிலே நின்றபடி
மூத்தண்ணர்ப் பிள்ளை
முழங்குகிறார், இவ்வாறு—

'பேரன்பு மிக்க பெரியோரே!
நண்பர்களே,
ஆதரவு தந்திடும் தோழர்களே;
கேளுங்கள்.
எந்த ஒரு பாதகமும் நாங்கள் புரிவதில்லை.
எங்கள் இனிய இளையதம்பிமார் எல்லாம்
சும்மா குழப்படியாய்க் கோள் மூட்டுகின்றார்கள்.

'நாங்கள் தருமர்.
நலஞ் செய்யும் கூட்டத்தார்.
தீங்கு நினைப்பதில்லை;
செய்து முடிப்பதில்லை;
வீடு கொளுத்தி விளையாட்டுப் பார்ப்பதில்லை;
டப்பா பல நிறைந்த எண்ணெயினை எற்றியபின்
பக்கென்று பற்ற நெருப்பை எரிப்பதில்லை.
பட்டுக் கடையும் பல சரக்கு மாளிகையும்
சப்பாத்துக் கூடமும், சாய்ப்பும், மடுவமும்,
பேப்பர் அலுவல் அகமும்
பெரிய பெருஞ் சோடாக் கடையும்
சுரண்டும் விறண்டியுள்ள போத்தில் அடுக்கின
பொன்னீர்த் தவறணையும்

மோதி இடித்தோ உடைத்தோ முடிப்பதில்லை.
தீ வைத்து நின்று சிரிப்பதில்லை.
தீ எரியும் வேளையிலே
நாங்கள் (b)பயிலா படிப்பதில்லை.
ஆடுவதும் இல்லை.

'அதொன்றும் தெரியாது.

'நூலகத்தின் மேலே தெருப்பும் இடுவதில்லை.
பால் சிறிது தந்தாற் பருகுவோம்.
அல்லாமல்,
வேறு குடிகள் விரும்போம்.
வெறி அறியோம்.

'தாடிக் கிழவர், தலை நரைத்த பாட்டிமார்,
வேடிக்கைக் காரப் பொடியன்கள் போல்
ஏதும் கல்லுருவம் கண்டால்
கடப்பாரை கொண்டுபோய் ஓங்கி அடிப்பதில்லை.
உண்மையாய்ச் சொல்லுகிறோம்—
நாங்கள் சிலையே உடைத்துக் கெடுப்பதில்லை.

'ஆட்சுட்டு வீதி அருகில் எறிவதில்லை.

'நாங்கள் தருமர்;
நலஞ்செய்யும் கூட்டத்தார்.

'எங்கள் இனிய இளையதம்பிமார் எல்லாம்
தம்மால் இயன்ற தடைகள் விதிக்க எண்ணிச்
சும்மா குழப்படிக்குக்
கோள் மூட்டுகின்றார்கள்.'

**2**

—

மூத்தண்ணர்ப் பிள்ளை
முடிக்கும் தறுவாயில்,

சின்ன இளையதம்பி
அங்கு தலைகாட்டவும்
காதை முறுக்கி,
கழுத்தில் அடி போட்டு,
பொத்திய கைகளாற் குட்டி,
(b)பிளேட்டாலே மூக்கை அரிந்து
முழிசினார், மூத்தண்ணர்.

பின்னர்...
இளையவனைத் தேற்றிவிட முற்பட்டார்.
கட்டித் தழுவி,
கதிரை கொடுத்து
இருத்தி
நாடி தடவி,
நயமான சொற்பேசி,
காலே அரைக்கால் அவுன்சு பச்சைத்தண்ணீரைக்
கொண்டுவந்து தந்து
குளிர்ந்து
முறுவலித்தார்.

எல்லா உலகும் இதைப்பார்த்து நிற்கிறது.

*1981*

# சிறுபிள்ளை வேளாண்மை?

'சிறு பிள்ளை வேளாண்மை வீடு வந்து
என்றேனும் சேர்வதுண்டோ?'
—புறுபுறுத்தாள் செல்வி புஷ்பலதா.
அவள் போய்ப்படித்த
திருவனமோ விவசாயக் கல்லூரி.
நியமனமோ
குறுநகர்ப்பள்ளிக் கமத்தொழில் ற்றீச்சர்.
குறைவில்லையே!

'நித்தமும் தோட்டம்!
படிக்குமா பிள்ளைகள்?
நேரம் எங்கே?'
—முத்து முஹம்மது, மூவரின் தந்தை,
முணுமுணுத்தார்.

கத்தரி வைத்தனர், பிள்ளைகள்—தோட்டத்தில்.
காய் பிடித்து
முற்றலாய் ஆவதன் முன்னம்
பறித்தார், முறைப்படியே.

புஷ்பலதாவும் மிகவும் சுவைத்தாள்—
பொரியல்களை.
மற்றும், தலைமை உபாத்தியார் மாணிக்கர்.
மாணவரின் பெற்றார்—முஹம்மது
உட்பட உள்ள பிற சில பேர்—
கத்தரிக் காயின் சுவையை
நுகர்ந்தார், கறி சமைத்தே.

## 2

தோட்டத் தொழிலிலே மட்டும் அல்லாது
தொடர்ந்து செல்லும்
ஏட்டுப் படிப்பிலும் விற்பன்னர் ஆனார்—
இளஞ் சிறுவர்,
சேட்டிஃபிக்கேற்றுகள், பட்டங்கள் பெற்றார்.
சில சில பேர்
வீட்டுக்குப் போய்ச் சேரும்
வேளாண்மை கூட விளைத்தனரே.

## 3

முணுமுணுப்பாளர், புறுபுறுப்பாளர்
முடிவடைந்து பிணமாய் எரிந்திட்ட பின்னர்,
அவர்கள்தம் பிள்ளைகளே
துணிவோடு உலகை நடத்தி வருகின்றார்.

தோல்வி கண்டும்
தணியாது மூளும்—உயிர்க்கனல்—
வேகம் தலையெடுத்தே!

*1978*

## சடுதி அடுக்குகள்

மர்மக் கதைகள் எல்லாம்
வாழ் நிலைமை மெய்ம்மைகளாய்
உண்மைக் கதையாகும் ஓர் உலகில்
வாழுகிறோம்.

முன்னர் நாம்
சாண்டிலியன், கல்கி சக அன்பர் மாயாவி
போன்ற சிலர் தீட்டும் வரலாற்று நாவலிலும்
அற்புதக் கற்பனைச் சித்திரக் காதையிலும்
மட்டும் தான்
மர்மத் திகில்கள் வரும் என்று
நம்பி இருந்தோம்.

நமது நிகழ்காலமோ,
இப்போதெல்லாம்,
அற்புதத்தில் அற்புதமாய் அன்றாடம்
காணப்படுகிறது,
யாரும் அறியா வகையில்,
திடுமென்ற தாக்கல், சிறை மீட்சி, ஆள் கடத்தல்,
சொல்லாமற் கொள்ளாமல் ஷொக்கடிக்கும்
பான்மையிலே
ஒற்றர்கள், தூதர், உளவறிவோர் என்றெல்லாம்
சம்பவங்கள் யாவும் சடுதி அடுக்குகளாய்
நேர்ந்து விடுகின்ற
நேரங்கள், நாழிகைகள் தானே,

இக்காலத்துச் சாதாரண நாட்கள்!
அப்படியானால், அன்பரீர்,
சடுதி நிகழ்வுகள் தான் இனி இயல்போ?
திகில்களின் தொடர்தான்
சீவியம் ஆகுமோ?

இல்லையேல்,
நேர்வை. எதிர்வை, தொகுவை முறைப்படி—
தீசிஸ், அன்ற்றிதீசிஸ், சிந்திசிஸ் முறைப்படி—
முரணற இசைந்த முன் போதல்களால்,
சாந்தி என்பதோர்
சாதாரண நிலை
தோன்றுதல் கூடுமோ?
சொல்லுவீர்—
வான்புகழ் தமிழிலே, வாய்மையின் முடிபினை.

1984

## ஒரு கட்டுக்கதை

ஆல மர நீழலிலே அமர்ந்திருந்தார், சுப்பையர்.
கோலிய தம் 'புளா' ஏந்தி,
குளிர் 'பனம்பால்' சுவைத்திருந்தார்.
'பாலில்' அது
புளொப்பென்று
பக்குவமாய் விழுந்ததுவே,

**2**

---

விழுந்தவுடன் சுப்பையர் நிமிர்ந்து பார்த்தார்.
மீசையினை முறுக்கினார்.
கண்கள் மின்ன,
கொழுந்து விடும் கோபத்தால் உடல் துடித்தார்—
'கூப்பிடந்தக் காகத்தை!'
என்று துள்ளி.

தலைப்பாகை சரிந்து விழ,
கைப்பிரம்பால்,
சடார் என்று
சுமைதாங்கிக் குத்துக்கல்லைத் தொலைப்பார்போல்
விளாசினார்.

துடிதுடித்து—
சூழ நின்ற கையாட்கள் கலைந்து போனார்.

'கொண்டு வா, கோடரியை.
வெட்டி வீழ்த்து—

கொப்புகளை, ஆலமர விழுதை எல்லாம்.
துண்டுகளாய்த் துகளாக்கு;
சாய்த்துப் போடு.
துப்புரவாய் இந்த மரம் சாம்பலாக்கு.

சுப்பையர் சீறினார்.
அவர் கையாட்கள்
சொன்னபடி செய்தார்கள்.
ஆலில் ஏதும், இப்பொழுது மிச்சமில்லை,
எல்லாம் சாம்பல்.
இல்லை எனில்....
கரித்துண்டு—குறங்கொள்ளித் தூள்.

ஆலமரம் அன்றோடே இறந்து போச்சாம்,
அதில் இருந்த காக்கை செய்த குற்றத்தாலே.
அதில் இருந்த காக்கையோ
அடுத்த ஊரில்—
அன்புள்ள நண்பியுடன், அரசங்கொப்பில்.

## 3

—

அரச நிழலிலும் அநேகம் புள்ளிகள்—
காக்கை எச்சக் கறுப்புப் புள்ளிகள்
வெள்ளை மணலிலே கறுப்புப் புள்ளிகள்!

அந்த வேளை,
'காக்கை எச்சத் தொல்லை முழுவதும்
கைக்கோடாரிகளால் ஒழிப்பேன்' என்று
வீறாப்புப் பேசுகிறார், சுப்பையர்.

ஏவலாட் கூட்டமும்
'ஈ' என
இளிக்குமே!

*1984*

# அகமும் புறமும்

கனகசிங்கர் கந்தையர் இரண்டு பேரும்
கனகாலம் நண்பர்களாய் இருந்து வந்தார்.
பிறகொரு நாள் மனக்கசப்பாற் பிரிந்துவிட்டார்,
பேச்சில்லை; பறைச்சல் இல்லை;
கப்சிப்—மௌனம்!

ஒரு நாள்....
மண்டையிற் காயம், மனத்திலே கோபம்,
வாயிலே மூளும் வார்த்தையின் நெருப்பு—
கனகசிங்கத்தார் கடுவலாய் இருந்தார்.
சண்டிக் கட்டுடன் சயிக்கிளில் வந்தவர்—
சட்டைக் கைகளைச் சுருட்டி விட்டவர்....

கந்தையாவின் கன்னம் சிவந்தது.
ஐந்து விரல்கள் அதிலே பதிந்தன.
'என்னய்யா நினைப்புனக்கு? ஏய்!
இவன்—உன்ரை மகன் சின்னய்யன்
பின்னுக்கு நிண்டெறிஞ்சு
பிடரியை உடைச்சுப் போட்டான்.
மண்டையும் வெடிச்சுப் போச்சே!
மடைப்பயல்—படு காவாலி,
கண்டிச்சு வைக்காவிட்டால்,
கழுத்தையும் முறிப்பனாக்கும்!
மிண்டுக்கு வராதையுங்கோ.
விளங்குதா?'
—கனகர் சொன்னார்.

கந்தையர் இதனைக் கேட்டார்.
கனகர்மேற் கல் எறிந்த
மைந்தனை மனத்துள் மெச்சி
மகிழ்ச்சியில் முழுகிப்போனார்.
'இந்த மூதேசிக்கெல்லாம்
இது நல்ல பரிசு தானே!'
—சிந்தையில் இவ்வாறெண்ணிச்
சினத்தையும் அடக்கிக் கொண்டார்.

'பொறுத்துக் கொள்ள வேணும், கனகர்.
இனிமேல் அப்பிடிச் செய்யான், பொடியன்.
கண்டிச்சு வைக்கிறென்.
நீங்கள் போங்கோ'
என்று
கந்தையர் எடுத்துக் கூறினார்.

மனத்துள் நினைப்பை
முழுதும்
வாய் திறந்தெங்கும் சொல்ல முடியுமோ?

*1985*

# சுவாமி அகிம்சானந்தா

ஊர் முழுதும் அவருடைய புகழினையே பாடும்—
உலகமெல்லாம் அவருடைய மகிமையையே பேசும்.
பேர் மிகுந்த சாமி அவர்.
பிரம்மமே ஆவார்.
பேசாத நாள் எல்லாம் பிறவா நாள் என்ப.

**2**

—

முன்னர்,
அவர் முனிசாமி எனப்பட்டார்.

'முனிசாமி மூர்க்கன்' என்று
சொன்னவர்கள் ஒருவர் அல்லர்.
ஆயிரம் பேர் ஒரே மனதாய்ச்
சொல்லி வந்தார்.
'கன்னி-பழி', வீடுடைப்பு,
கடை கண்ணி எரிமூட்டல்,
கத்திக் குத்தல்—
என்ன உண்டோ பாதகங்கள்—
இவை எல்லாம் முனிசாமி ஏகபோகம்.

உபதேசம் செய்தார்கள் உத்தமர்கள்.
பலன் இல்லை—ஒன்றும் இல்லை.
அவனோடு ஒத்த சில சண்டியர்கள்
இடையிடையே அடித்தும் பார்த்தார்.

விடுவானோ, முனிசாமி தன்னுடைய
மிறாய்ப்புகளை?
வீரன் அன்றோ!
கடைசியில் ஓர் சண்டையிலே
கால் முறிந்து முடமானான்—
கன்னம் வீங்கி

## 3

பிறகு.
காலம் கரைந்தது.
கைகள் சோர்ந்தன.
முனிசாமி நல்லதோர் முனிவர் ஆயினான்

அந்த முனிவரே அகிம்சானந்தா.
'அகிம்சையே பரம தருமம்' என்று
உரைப்பார்.
'ஆயுதம் தாங்கி எதிர்போர்
கோழைகள் ;
அகிம்சையே வீரரின் ஆயுதம் ஆகும் ;
இன்றைய அமைதி அகிம்சையின் வெற்றி'
என்று போதிப்பார் சுவாமி.

நன்று நன்றி
நமோ நம போற்றியே

(வால்மீகியார் மன்னிப்பாராக)

1985

# தியாகம்

சிம்ஃபனி ஒக்கெஸ்ற்/றா
என்பது மட்டும் தான்
அப்பா விரும்பும் சங்கீதம்

தந்தன தரனன்னா தானன தானானா
என்பது மட்டும் தான்
அம்மா விரும்பும் சங்கீதம்.

பிள்ளைகள் விருப்பமோ மெல்லிசை ஆகும்.
திரைப்பட மெட்டு, சித்திரகானம்,
அனைத்தும் அவர்களின் விருந்தாகும்மே.
இதனால்,
வானொலிப்பெட்டி வாய் மூடுவதில்லை
இராப்பகல் வேலைதான்.
இல்லை ஓர் ஓய்வும்.
மூன்று வானொலிகள் மூலைகள் தோறும்
முயற்சியில் ஈடுபட்டிருப்பனவாகும்.
ஸ்ற்றீறியோ செற்றும் றெக்கோட் பிளேயரும்
ற்றுவீற்றரும் வூஃபரும்....
ஒலித்துணை பலப்பல.

**2**

இரவு முற்றும் சங்கீதம் கேட்பதொன்றே
எப்போதும் அப்பாவின் விருப்பமாகும்.
குரலிசைகள் மற்றவைகள் ஓய்ந்த பின்னும்
குடும்பமுற்றும் நித்திரைக்குப் போன பின்னும்

மிகத்தாழ்வாய் ஒலிக்கின்ற இசையைப் போட்டு
மெத்தையிலே சாய்ந்திருத்தல் வழக்கம் ஆகும்.
அகத்தாரும் அறியார்கள்—
என்ன நேரம்
அந்த இசை நின்றதென்ற மருமம் தன்னை.

சிம்ஃபனி ஒக்கெஸ்ற்/றாவை விடவே மாட்டார்.
சிறப்பாகக் கண் விழித்துப் பொறுத்திருப்பார்.

**3**

—

சம்பவங்கள் பல பின்பு நடந்ததாலே...
தம்முடைய நடைமுறையை மாற்றிவிட்டார்.

இரவிலே என்னவோ
இனம் புரியாத
சத்தம், சந்தடி—சடார் என வெடிகள்,
அதிர்ச்சியின் தொடர்ச்சி,
அப்புறம்
இரைச்சல் !
நாய்களின் குரைப்பு—
நடு நிசி வேளையில்...
பாய்களிற் கிடக்கும் பாட்டிமார் கூட,
பனிக்குளிர் இல்லாப் பங்குனி இருட்டிலும்
இடையிராப் பொழுதில் எழும்பி, உட்கார்ந்து
வெட வெட என்று நடுங்குகிறார்கள்.
வியர்வை வெருகிட நடுங்குகிறார்கள்.

**4**

—

அம்மா, பிள்ளைகள் மாத்திரம் அல்ல,
அப்பா கூட... இப்போது....
சங்கீதங்களைத் தவிர்த்துவிட்டாரே!

1985

## வேறு விதங்கள்

பாட்டர் கிழவர்
தம் பல் இல்லா வாயினால்
நூற்றுக் கணக்கான பேய்க்கதைகள் சொல்லுவார்.
கேட்கும் சிறுவர்களும் பல் விழுந்த வாய் பிளந்தே,
'ஆ' என்றவாறு
மிக ஆச்சரியம் கொள்வார்கள்.

கொள்ளிவாய்ப் பேய்கள் எல்லாம்
குபுக்கென்று நெருப்புக் கக்கி,
வெள்ளி செவ்வாய்கள் தோறும்
வெளிக்கிட்டுத் திரியும் என்றும்...

சுடலையிற் புளியின் மேலே
தொற்றிய முனியைக் கட்டிப்
பிடரியில் ஆணி வைத்தார்,
பிலாவடிச் சின்னர் என்றும்....

ஓங்கியே அடித்த பின்னர்
உறிஞ்சி, நல்லிரத்தம் முற்றும்
வாங்கிய பிசாசு,
பற்றை வளவிலே
உறங்கும் என்றும்....

பல பல கதைகள் சொல்வார்,
பாட்டனார்.

சிறுவர் கேட்பார்.
சில வருடங்கள் போக,
சிறுவர்கள் இளைஞர் ஆனார்.

இளைஞரின் அநுபவத்தில்
இப்படிப்பட்ட பேய்கள்
நுழைவது குறைந்து போச்சு.
நோக்கிய அவர்கள்,
'ஓகோ !
தெரு விளக்குகளின் சிறந்த மின் ஒளியினால்,
பேய்கள், பிசாசுகள், முனிகள் யாவையும்
ஓட்டம் பிடித்தன போலும் !
இப்போது,
முன்னர்ப் போல அதிகம் பேய்களைக்
காண்பது மிகவும் அருமையாய் உள்ளது'
என்ற ரீதியில் எண்ணத் தொடங்கினர்.

இளைஞரின் எண்ணம் இப்படி இருந்தது.

ஆனால், ஒன்று—
வேறு விதங்களில் மிகப்பல பேய்கள்
குறுக்கும் மறுக்கும் திரிவன—
இருட்டிலும் வெளிப்பிலும் இரவிலும் பகலிலும்.

*1984*

## முதலைகளும் மதலைகளும்

'அருகி வரும் உயிரினங்கள் சில உண்டாம், உலகில்;
அவற்றுள்ளே முதலை இனம் ஒன்று'
என்பர் அறிஞர்.
எனினும், அந்த முதலைகளோ, இன்னும் எங்கள்
நாட்டில்
எண்ணிக்கை பலவாகி உள்ளனவே
என்று
செய்தி ஒன்று சொல்கிறது—சிறப்பாக வியந்து.

**2**

'எங்களது நாட்டினிலே
முதலைக் கூட்டம்
எண்ணிக்கை குறையாமல் இருப்பதற்கு
நன்கு சில காரணங்கள் உளவாம்
என்று
நாட்டினார், நாட்டு நலன் துணை அமைச்சர்.

'ஏதுக்கள் பலவற்றுள் முதலாம் ஏது
என்னவென்றால்—
இங்குள்ள அகிம்சைக் கொள்கை
மோதல்கள் எல்லாமே.
பாவம் !
ஆனால்,
முதலைகளைக் கொல்லுவதோ
முதலாம் பாவம்.

'முதலைகளைக் கொல்லுவது பாவம் என்று
முன்னோரும் பின்னோரும் நினைப்பதாலே
முதலையினம் இந்நாட்டிற் பெருகி வாழும்'
முடிவுரைத்தார் துணையமைச்சர்—
இவ்வாறாக.

## 3

எனினும்,
மேற்படி செய்தியைக் கேட்ட
சின்னதம்பியர்
பின்வருமாறு பேசல் ஆயினார்—
'முதலை முதலை தான்
மதலை மதலையா ?
மதலை என்பது பிள்ளையைக் குறிக்குமாம்.
மதலையின் பேச்சுக்கள் மழலைகள் எனப்படும்.
மதலைகள் குஞ்சுகள் ...
மனித குஞ்சுகள்...

.... .... .... .... ... ...

முதலைகள் இங்கே சுகமாய் வாழலாம்
தம் இனம் பெருக்கி,
சஞ்சலம் இன்றி,
நீரிலும் நிலத்திலும் ஊரலாம்,
உலாவலாம்.

முதலைகள் இதமாய் உலாவலாம்.
மதலைகள் ?
பாவம் !
என்ன செய்யலாம்.

*1984*

## கதி

நுளம்புகளே, உங்களை நம் ஆய்வாளர்கள்
நோய்க்கிருமி என்றுதான் வரைவு செய்தார்.
தழும்புகளை நீங்கள் எங்கள் கை, கால் எல்லாம்
தருவதற்கு முயல்வதுண்டு.
தயவு செய்து
துருதுருப்பை, முணுமுணுப்பை விடுதல் நன்று

ஏன் என்றால் அது கொஞ்சம் கரைச்சல்.
உம்மை இறக்க வைத்தல்
எங்களுக்கு நோக்கம் இல்லை.
பேன் என்றால், தலையில் மட்டும் இருக்கும்.
நீங்கள்
பிற உறுப்பு முழுவதிலும் இருக்கின்றீர்கள்
விறுவிறுக்கச் சில வேளை கடிக்கின்றீர்கள்.

சருமத்தில் ஊருகிற உணர்ச்சி
கொஞ்சம் சவுகரியக் குறைவாகும்.
அதனாலே தான் ...
இருளுக்குள் எம்முடைய நெற்றி, கன்னம்
இவைகளை நாம் தடவுகிறோம்.
இந்த வேளை...
செவியருகில் நீர் நசிந்து
குழம்பாகின்றீர்.

கொல்வதல்ல நம் நோக்கம்.
எங்கள் தூக்கம் குழம்புவதை
விரும்பவில்லை, நாங்கள்,
நீங்கள்
எல்லைகளே உணருவதே நல்லதாகும்.
இல்லை என்றால் ...
நசிவதன்றிக் கதி வேறு இல்லை.
தொல்லை தருகின்றோர்க்கு
விதி வேறில்லை.

நுளம்புகளே,
உங்களை
நம் ஆய்வாளர்கள்
நோய்க்கிருமி என்றுதான் வரைவு செய்தார்.

*1988*

# 7

# நாட்டம்

# நாட்டம்

வருந்தி நாள் தொறும் இரங்குவார் துயர்
மறைந்து போய் ஒழிந்து ஓடுதல்,
இரந்து வாழ்பவர், இழந்து நோபவர்
எவரும் ஆனந்தம் மேவுதல்,
துரந்த தீமைகள் எரிந்து போய்விடல்,
தொழில்கள் யாவையும் வாழுதல்,
பரந்த பேரறிவு அமைந்த தூயவர்
பரிந்திவ் வாய்மையை நாடுவார்.

வதிய வீடுகள், வளரும் ஆலைகள்,
மகிழ வேறுள சாலைகள்,
புதிய வேலைகள், பொழில்கள், சோலைகள்,
புனர் நிர்மாணக வேலைகள்,
அதிக ஓய்வுடன் அகில லோகமும்
அமைதி சாருதல், ஆறுதல்,
விதியை மீறிட விழைவிலாதவர்
மிகவும் ஆகிய நாடுகள்.

பெருகி மீறிய சன மகாகுலம்
பிழை இலா வகை மேவுதல்,
அருகி நோய் பிணி அகல ஓடுதல்
அசைவிலா நிலை கூடுதல்,
திருகியே அதி கொடிய பாவிகள்
திமிரை வாள் கொடு வாருதல் —
'வருக மாநில வளம் எலாம்' என
மதி மிகு ஆர்வலர் நாடுவார்.

பிறரை நாம் என நலம் அவாவிய
பெரிய சாதனை கூடுதல்,
அறிவினால் அதி பெரிய நானிலம்
அரியதாய் நவம் ஆகுதல்,
குறைகளோ இனி எதுவுமே இலை ;
கொளுவலே இலை ஆம் என
வறுமை ஓடிட, வளம் எலாம் உற
மதியின் மேலவர் நாடுவார்.

அழகை நாடிய அமர ஓவியர்.
அமுத காவியம் ஆய்பவர்,
உழவின் ஆகிய உயர்வு, மேன்மைகள்,
உணர்வின் ஆகிய நீதிகள்,
பழகுவோரிடை பரிவு கூடுதல்,
பசியினால் உழலா நிலை,
விழவு நாளென மிகவும் ஆடல்கள்
விளைய மேலவர் நாடுவார்.

*1959*

# எழுபத்தாறு

அறிவினை விரிவு செய்
ஆற்றல் பெருக்கு
இனியன பேசு
ஈழம் எம் அன்னை
உழவு விரும்பு
ஊர்திகள் ஓட்டு
எந்திரம் பழகு
ஏழைமை போக்கு
ஒற்றுமை நல்லது
ஓசை நயம் உணர்.

**2**

—

கமஞ் செய விரும்பு
காணி திருத்து
கிண்டி எரு இடு
கீரையும் பயிர் செய்
குளங்கள் திருத்து
கூடி உழைத்திடு
கெதியைக் குறையேல்
கேட்டறிந்தொழுகு
கொத்திச் சாறு
கோழிப் பண்ணை வை.

**3**

—

சமன் செய எழும்பு
சாதிகள் வேண்டாம்.

சிவப்பது சிறப்பு
சீவியம் திருத்து
சுரண்டலைச் சகியேல்
சூழ்ச்சியை விலக்கு
செல்வம் பகிர்ந்து கொள்
சேவகஞ் செய்யேல்
சொத்துகள் பொதுமை செய்
சோர்வே பெரும் பகை

4

—

தடைகளை அகற்றுக.
தாயகம் போற்று.
திருத்துக தீயவை
தீட்டுக புத்தி
துரைகளுக்கு அஞ்சேல்
தூள் செய் கொடுமையை
தெளிவே தெய்வம்
தேவைகள் நிறைவு செய்
தொல்லைகள் நீக்கு
தோல்விக்கு இணங்கேல்

5

—

நல்ல திவ்வுலகம்
நாங்கள் மனிதர்.
நின்ற நிலையில் நில்.
நீதியை நிறுவு
நுட்பவியல் பயில்
நூல்களை ஆராய்
நெஞ்சம் கலங்கேல்
நேரம் கடத்தேல்
நொய்யது நையும்
நோக்கம் மறவேல்

**6**

—

பசிப்பிணி நீக்கு
பாடு படுக.
பிழைகளைத் திருத்து
பீடைகள் நொருக்கு
புவி மிக இனியது
பூஞ்செடி பேணு
பெண்மையை உயர்வு செய்
பேச்சிற் கனிவு கொள்
பொருள் மெய் என்றுணர்
போதனை புகுந்து காண்.

**7**

—


மகிழ்ந்திட வழி வகு
மாற்றுக உலகை
மின் வலுப் பயன் கொள்
மீட்டுக வீணைகள்
முந்திய துயர் விடு
மூழ்குக அன்பிலே
மெண்மையைத் தழுவு
மேகமேல் உலாவி வா
மொட்டுகள் மோந்து பார்
மோட்சம் இவ்வையகம்

**8**

—

வருந்துதல் தவிர்க
வாழ்த்துக மானிதம்
விஞ்ஞானம் பயில்
வீண் பயம் நீக்கு
வெற்றிமேல் வெற்றி கொள்
வேலையால் உய்தி காண்.

*1976*



SAB